Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්

வெளியீடு :- 85 | அக்டோபர் 2017 | விலை ரூபா :- 20.00



# ஏமாற்றங்கள் ஆகிவிட்ட எதிர்பார்ப்புக்கள்?

2015 இல் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களின் பின்னர் உருவான அரசாங்கம் மக்களுக்களித்த வாக்குறுதிகளில் எவ்வளவு தூரம் முன் சென்றிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

பெருவாரியான மக்களின் ஆணை கிடைத்ததென்ற வகையில் தற்துணிவுடன் நடந்து கொண்டிருக்கவேண்டும்.

தற்காப்பு இழுபறிகள் மூழ்கிப்போகவே வழிவகுக்கும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது கிழக்கு- வடக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைப்பது

மக்களின் நிலங்களை திரும்பவும் அவர்களிடம் கையளிப்பது

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களை ஆற்றுவதில் உறுதியான சமரசமற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஏன் இந்த இழுபறி

( தொடர்ச்சி 9 ஆம் பக்கம் பார்க்க )




## தோழர் பிரதிக்கு

### தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி அஞ்சலி



மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தோழர் பிரதி என எம்மால் அன்போடு அழைக்கப்பட்ட இராயப்பு பிரதீபன், இந்த கிராமத்தின் பல குடும்பங்களைப்போல, தனது குடும்பத்தினர், உறவினர்கள் பலரைப்போல தமிழ் மக்களின், தான் சார்ந்த சமூகத்தின் விடிவிற்காக பங்களிப்புக்களைச் செய்தவர். இதனால், அவரும் அவரது குடும்பத்தினரும் பல்வேறு இன்னல்களுக்கும், இடம்பெயர்வுக்கும், அகதி வாழ்க்கைக்கும் உள்ளான போதும் கடந்த 27 வருடங்களுக்கு மேலாக தனது நிலைப்பாட்டில் நம்பிக்கையோடு எம்மோடு கைகோர்த்து நின்றவர். மிக இளம் வயதில், துடுக்குத்தனம் மிக்கவராக எமக்கு அறிமுகமாகிய அவர் இன்று ஒரு தொழிற்சாலையின் உரிமையாளராக, நல்ல தந்தையாக உயர்ந்து நின்றார். இதனால், நாம் அனைவரும் அடைந்த மகிழ்ச்சி பறிபோகும் வகையில் 09.10.2017 அன்று அவரது மரணம் சம்பவித்திருக்கிறது. அவருக்கு எம் அஞ்சலியை உரித்தாக்குகிறோம்.

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை



முதலமைச்சரின் வேண்டுகோளும் ஜனாதிபதியின் பதிலும்

ஒரு போராளியின் முகநூல் பதிவு



அண்மையில், கொழும்பில் - ஒருசில தமிழ் பேசுவோர்களையும் ஒருசில வெளிநாட்டவர்களையும் தவிர - முழுவதும் சிங்கள வர்களே பங்கேற்றிருந்த ஒரு சபையில் நான் அமர்ந்திருந்தேன்.

வடக்கு முதலமைச்சர் க. வி. விக்கினேஸ்வரன் ஆங்கிலத்தில் உரையாற்றினார். பின்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பதிலளித்தார்.

அவரிடம் ஒரு கேள்வி — ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன யாழ்ப்பாணத்திற்கு

( தொடர்ச்சி 9 ம் பக்கம் பார்க்க)




## கவனிக்கப்படாத மானிப்பாய் வீதி

யுத்தம் முடிவடைந்த பின் வடக்கு கிழக்கில் அனேகமான வீதிகள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு காப்பற் வீதிகளாக ஆக்கப்பட்டன.

வீதிகள் மட்டுமல்ல பாலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள், நீதிமன்ற கட்டிடங்கள், பிரதேச செயலக காரியாலயங்கள், மாநகர, நகர, பிரதேச சபைகளின் பணிமனைகள் என பல்வேறு கட்டிடங்களும் புனரமைக்கப்பட்டும், புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றன.

இவ்வாறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது என்ற பேரில் முன்னைய மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்க காலத்தில் பெரும் ஊழல்கள், அதிகார துஸ்பிரயோகங்கள் இடம்

( தொடர்ச்சி 9 ம் பக்கம் )

அரசியல் அமைப்பை ஆழமாகப் பார்த்து முடிவு செய்யுங்கள் பக்கம்-03



த.ச.ஜ.க தலைவர் ஸ்ரீதரன் (சுகு) செவ்வி பக்கம்-04



போராளிகளை நினைவு கூருவோம் பக்கம்-07



ஐரோப்பாவில் அகதிகளின் நிலை பக்கம்-08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
sdptoffice@gmail.com
294 A. கண்டிவீதி. யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



## விமோசனத்திற்கான பாதை

மத்தியில் அதிகாரங்களைக் குவிக்காமல் சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களுக்கு பகிர்வது பற்றிய கருத்து உலகளாவிய அளவில் வலுவடைந்து வருகிறது.

அதிகாரங்களை குவிக்கும் அரசுகள் பின்தங்கியவை ஜனநாயக மற்றவை சமகாலத்தில் பின்தங்கியவை ஜனநாயகமற்றவை என்பது இன்றைய உலகின் சாரம்சமான அபிப்பிராயமாகும்.

**இன சமூகங்களுக்கு அதிகாரங்களை பகிர்வது**

**பெண்களுக்கான அதிகாரம்**

**சாதி ரீதியான- சமூக நீதி மறுக்கப்பட்டவர்கள்**

**சமச்சீரான வளர்ச்சி நிகழாமல் காலம்காலமக புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்கள்**

**மலையக மக்கள்**

**இவ்வாறு இடையறாது அதிகாரப் பகிர்வு நிகழவேண்டும்.**

சமூக ஊடகங்கள் ஊடக தனிமனிதர்கள் குழுக்கள் என்று அடையாளங்கள் உருவாகியுள்ள காலத்தில் இது மேலதிக முக்கியத்துவம் பெறுகிறது.

இலங்கை வளங்களும் ஆற்றலும் இருந்தும் இன்னும் சமூக பொருளாதார பின்தங்கலில் இருந்து விடுபடவில்லையானால் அதற்கு பிரதான காரணம் இலங்கையில் தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பாகவும் சமூக நீதி தொடர்பாகவும் குறைந்த மட்ட பிரக்ஞை நிலவுவதே.

பெருஞ்சேதம் விளைவிக்கும் அனர்த்தங்கள் போல் தமிழர் மீதான வெறுப்பு முஸ்லீம்கள் மீதான வெறுப்பு என்று விசச்சுழல் இலங்கையின் தொடர்துயரமாக இருந்து கொண்டிருக்கிறது.

எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ் உலகு என்ற நிலை மேலெழும் வரை இந்த நாடு உருப்படுவதென்பது அசாத்தியமே.

பொதுவாக மக்கள்மத்தியில் குறைந்த பட்ச சமத்துவம் இன்மையும் இனசமூகங்கள் மீதான அநீதியும் கடந்துவந்த 46 ஆண்டுகளாக இரத்தத்தை சிந்த வைத்திருக்கிறது.

சமத்துவமின்மை மோதல்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் மீண்டும் மீண்டு வழிவகுக்கும்.

பாரபட்சங்களில் இருந்து விடுபடுவதற்கான எத்தனங்கள் இலங்கையில் நிகழவில்லை என்றில்லை.

கிளர்ச்சிகள் பாரபட்சங்கள் அநீதிகள் களையப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தின.

ஆக்கபூர்வமான பிரயத்தனங்களும் நிகழ்ந்தன.

ஆனால், அவை பெரும் பின்னடைவைச் சந்தித்தன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தினடிப்படையில் மாகாண சபைகள் உருவாகியது இலங்கையில் பிராந்திய மட்டத்தில் அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பதில் ஒரு குறிப்பிடத்தகுந்த பாய்ச்சலாகும்.

1995 இல் சந்திரிகா ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட தீர்வு முயற்சிகள் பொறுப்பற்ற இனவாத சந்தர்ப்பவாத அரசியல் விபரீத விளையாட்டுக்களால் பெரும் பின்னடைவைச் சந்தித்தன.

2015 ஜனவரி 8 இற்கு பிந்திய சூழலில் இலங்கையின் சமூக பொருளாதார வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவதற்கான முயற்சிகள் பல இழுபறிகள் குழிபறிப்புக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய அரசியல் யாப்புக்காக பாராளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டு இலங்கையின் வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவதற்கான பிரயத்தனங்கள் நிகழ்கின்றன.

இயன்ற வரை பரந்த கலந்துரையாடல்கள் ஊடாக முன்னெடுக்கப் பட்டாலும் அரசியல் யாப்பு சீர்திருத்த முயற்சிகள் உருச் சிதைந்த வரைபுகள் ஆக மாறிக் கொண்டிருக்கின்றன.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைத்துவம் என்பது சமூகத்தில் அறிவார்ந்த மனிதர்கள் மீதான தீண்டமையைத் தவிர்த்து மக்கள் மத்தியில் உரையாடலுக்கான இடைவெளியை மீண்டும் மீண்டும் உருவாக்கி தீர்வை காண முன் வர வேண்டும்.

இலங்கை பீதியூட்டும் நாடல்ல என்ற நிலை ஏதோ ஒரு அளவில் உருவாகி இருக்கிறது. அதனை மேலும் செழுமையுறச் செய்ய வேண்டும்.

சக மனிதர்கள் மீது விரோதம் குரோதத்தை உமிழ்பவர்கள் இராணுவ வாத மேலாதிக்க சிந்தனை என்பன கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

விமோசனத்திற்கான பாதையை கண்டறிய வேண்டும்.

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
**Social Democratic Party of Tamils (S.D.P.T)**

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற
கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

**( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 10 ஆம் பாகம் )**

- இலங்கையில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் கடைசிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்தமீறல்கள் பாரபட்சமற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதில் மனிதாபிமானம் உடையோர் அனைவரும் அக்கறையோடு இருப்பதை இக்கட்சி வரவேற்கிறது. ஒரு நாட்டின் சட்டபூர்வமான படைகள் எந்தக் காரணம் கொண்டும் பயங்கரவாதிகள் போல நடந்து கொள்ளக் கூடாது என்பது அவசியமாகும். அந்த வகையில் யுத்த மீறல்கள் எந்தளவு நடந்திருக்கின்றன என்பதைக் கண்டறிய உரிய விசாரணைகள மேற்கொள்ளப் படுவது நாட்டின் நற்பெயருக்கும் அரச படைகளின் எதிர்கால ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கும் அவசியமென்பதை அரசு உணர்ந்து அதற்குரிய வகையில் நேர்மையான விசாரணைகளுக்கு வழிவகுக்க வேண்டும்.
- அதேவேளை, அது மட்டும் போதியதல்ல. இந்த நாட்டில் தமிழ் பேசும் சமூகத்தவர்களுக்கு உள்ளும், தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களுக்கு இடையிலும் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையில் இடம் பெற்ற அனைத்து வகையான மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மானுட சட்டங்கள் மீறப்பட்டமை பற்றிய உண்மைகள் முழுமையாக வெளிக் கொணரப்படுவதன் மூலமே கடந்த காலத் தவறுகள் பற்றிய முழுமையான புரிதலைப் பெற முடியும்.

**25. வெற்றி - தோல்வி சின்னங்கள் எதுவும் வேண்டாம்**

இலங்கை அரசாங்கம் வடக்கு-கிழக்கு எங்கும் அரச படைகள் அடைந்த யுத்த வெற்றியின் நினைவுச் சின்னங்களை பல்வேறு இடங்களில் நிறுவியுள்ளது. அதேபோல் பல இடங்களில் யுத்த கால அழிவுச் சின்னங்களையும் பாதுகாத்து வருகிறது. அதே வேளை, புலிகளின் ஆதரவாளர்கள் "முள்ளிவாய்க்காலில் நினைவுச் சின்னம் வைக்க வேண்டும்" எனவும் "மாவீரர் சுடலைகள் பராமரிக்கப்பட வேண்டும்" எனவும் தமது யுத்த தோல்வியின் நினைவுச் சின்னங்களை நிறுவ வேண்டுமென்பதில் குறியாக உள்ளனர். இவையெல்லாம் யுத்தத்தால் ஏற்பட்ட வலிகளையும், துயர நினைவுகளையும் வாழ வைக்கின்ற நடவடிக்கைகளாகும். இது நாட்டின் தேசிய நல்லிணக்கத்துக்கோ அல்லது யுத்த அழிவுகளால் பாதிக்கப்பட்ட சமூகம் கடந்த காலத்தை மன்னித்து, மறந்து, புதியகாலத்தை நோக்கி முன் னேறுவதற்கோ தடைகளாகவே அமையும். எனவே, கடந்தகால யுத்தம் தொடர்பான அனைத்து சின்னங்களையும் இல்லாது செய்து, அனைத்து யுத்த வடுக்களையும் மறைத்துவிட வேண்டும்.

**26. இலங்கையின் ஊடகங்கள் தொடர்பாக:-**

தகவல் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்காக சாக்ரடீஸ் காலம் தொடக்கம் உலகம் முழுக்க போராட்டங்கள் தொடர்ந்து வந்திருப்பதை வரலாறு காட்டுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக போராடிப் பெறப்பட்ட இந்த சுதந்திரங்கள் இங்கே பெரும்பாலான ஊடகவியலாளர்களால் அறிந்தோ அறியாமலோ துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் ஜனநாயகத்தின் பிரதானமான அங்கங்களே, ஆனால், இங்கே அவை குறுகிய அரசியல் இலாப இலக்குகளுக்காகவும், வியாபார வாய்ப்புகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பது கவலைக்குரிய விடயமாகும். ஜனநாயகப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு அரசியற் கட்சிகள் பல இருப்பது போல, பக்கச்சார்பற்ற ஊடகங்களும் மிகவும் அவசியமாகும். அவை பிரசாரத் திரிபுகளின்றி உண்மைகளை மக்கள் அறியும் வண்ணம் செயற்பட வேண்டும். பிளவுபட்டு இரத்த ஆறு ஓடிய இந்த நாடு சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் நோக்கி முன்னேறுவதற்கு, ஊடகங்களின் எழுத்துக்களும் காட்சிகளும் பயன்பட வேண்டும், இனப்பற்றையும், தேசப்பற்றையும் காரணம் காட்டி அரசியல்வாதிகளின் வேலைகளை, நாளேடுகள் செய்யாமல் நடுநிலை வழுவாது செய்திகளை வழங்கி சமூக நீதியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

**27. தமிழர் சமூகத்திலுள்ள புத்திஜீவிகள் தொடர்பாக:-**

ஒரு சமூகத்தில் அறிவின் வளர்ச்சியும் ஆற்றல்களின் முன் னேற்றமும், செயற் துடிப்புகளும், சமூகநலக் காரியங்களை ஆக்கும் வல்லமைகளும் அந்த சமூகத்தில் வாழும் புத்திஜீவிகளின் பங்களிப்புகளிலேயே தங்கியிருக்கின்றது. புத்திஜீவிகளின் அறிவாற்றல், அனுபவத் தேர்ச்சி மற்றும் நேர்மைத்திறன் என்ப வற்றின் தராதரத்தினாலும், தமது சமூகம் தொடர்பான அவர் களின் அர்ப்பணிப்பின் தன்மையினாலுமே அந்த சமூகத்தின் முன்னேற்றங்களும்

(அடுத்த இதழில் தொடரும்)

**தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!**

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் ,
ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
தொடர்புகளுக்கு :-

இல: 294 A, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 021 222 2022
e-mail : sdptoffice@gmail.com / /Face book : sdpt srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் அமைப்பினை மேலெழுந்தவாரியாக பார்க்காமல் ஆழமாகப் பார்த்து முடிவு செய்யுங்கள்

## லண்டனில் புலம்பெயர் இலங்கைத் தமிழர் அமைப்பினர் மத்தியில் ஜெயம்பதி விக்ரமரத்ன

**அரசியல் அமைப்புக் குறித்து மக்களிடம் ஆலோசனைகள் கேட்டபோது சிங்கள மக்களில் பெரும்பாலோர் சமஷ்டியை ஏன் எதிர்க்கிறார்கள்? என வினவப்பட்ட போது அது பிரிவினையை ஏற்படுத்திவிடும் எனத் தெரிவித்த அம் மக்கள். அதிக அதிகாரங்களை வழங்குவதை எதிர்க்கவில்லை.**

**அதேபோல ஒற்றை ஆட்சியை ஏன் எதிர்க்கிறீர்கள்? என தமிழ் மக்களிடம் வினவியபோது வழங்கிய அதிகாரங்களைப் பறிக்கும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.**

**ஆங்கிலத்திலிருந்து மொழிமாற்றம் செய்து கூறப்படும் 'ஒற்றை ஆட்சி' என்ற பதத்தை விலக்குமாறு கோரிய தமிழ் மக்கள் பிரிக்கப்படாத. பிரிக்க முடியாத இலங்கை என்பதை ஏற்றுள்ளனர்.**



பிரித்தானியவிற்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் ஜயம்பதி விக்கிரமரட்ண கடந்த 08.10.2017 அன்று லண்டனில் புலம் பெயர் இலங்கைத் தமிழர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலின் போது "புதிய அரசியல் அமைப்பு முயற்சிகளும் எதிர்நோக்கும் சவால்களும்" என்ற தலைப்பில் மிகவும் விரிவாக உரையாற்றினார்.

அவரது உரையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பினை புதியயோசனைகளுடன் ஒப்பீடு செய்து புதிய மாற்றங்களை விளக்கினார்.

தனது ஆரம்ப உரையில் இலங்கையில் நடைமுறையிலிருந்த அரசியல் அமைப்புகளின் வரலாறுபற்றி தெரிவிக்கையில் சோல்பரி அரசியல் அமைப்பு பிரித்தானியரால் திணிக்கப்பட்ட ஒன்று எனவும். அதன் பின்னர் நடைமுறைக்கு வந்த முதலாவது குடியரசு யாப்பு ஐக்கிய முன்னணி அரசின் அதிகளவு பாராளுமன்றப் பலத்தின் காரணமாகவும். ஐக்கிய தேசியக் கட்சியின் படுதோல்வியின் பின்னணியில் உருவானதால் ஐக்கிய முன்னணியில் செயற்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி. லங்கா சம சமாஜக் கட்சி. கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் யாப்பாகவே கொள்ளுதல் பொருத்தமானது எனவும் அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் 4/5 பெரும்பான்மைப் பலத்தின் பின்னணியில்தான் இரண்டாவது குடியரசு யாப்பு அதாவது தற்போது நடைமுறையிலுள்ள யாப்பினைக் கருதவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ் வரலாற்றின் பின்னணியில் தற்போது விவாதிக்கப்படும் யாப்பு முற்றிலும் புதிதான அரசியல் பின்னணியில் தயாரிக்கப்படுவதாக விளக்கினார்.

கடந்த கால யாப்புத் தயாரிப்பின் போது ஒருவகையில் திணிக்கப்பட்ட ஒன்று எனத் தெரிவித்த அவர் அதன் காரணமாகவே தந்தை செல்வா அரசியல் அமைப்பு விவாதங்களில் கலந்து கொள்ளாமல் விலகிய சம்பவம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது தேசத்தின் மக்களிடம் பரவலான அபிப்பிராயங்கள் பெறப்பட்டதோடு. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முழுமையான ஆதரவோடு பாராளுமன்றம் அரசியல் அமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டுள்ளது எனவும். கடந்த காலத்தில் ஒன்றை ஒன்று எதிர்த்து அரசியலை நடத்திய பிரதான அரசியல் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சி. ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒரே அரசாங்கத்தில் இணைந்து அக் கட்சிகளே தேசியப் பிரச்னைகளைத் தீர்த்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளதாகவும். இக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய அரசியல் யாப்புத் தொடர்பான வழிகாட்டுக் குழுவின் பிரதான யோசனைகளை பல முக்கிய கட்சிகள் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வழிகாட்டுக் குழுவின் அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக ஏற்றுள்ளது. அதேபோல மைத்திரிபால சிறிசேனா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி. சில யின் பிரதான பகுதிகளை தமிழர் தேசியக் கூட்டமைப்பு. ஈ.பி.டி.பி.. மலையக கட்சிகள். முஸ்லீம் காங்கிரஸ். அரசிற்கு வெளியில் செயற்படும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ஆதரித்துள்ளன.

இதில் விசேஷ அம்சம் என்னவெனில் 13 வது திருத்தத்தினை அதாவது அதிகார பரவலாக்கத்தினை எதிர்த்து வந்த ஜே.வி.பி தற்போது பின்வரும் மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது. அதாவது:

- நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சியை ஒழித்தல்.
- தேர்தல் முறையை மாற்றுதல்.
- அதிகாரபரவலாக்கத்தினை நடைமுறைப்படுத்தல்.

மேற்குறித்த மூன்று நிபந்தனைகளையும் சமகாலத்தில் நிறைவேற்ற அரசு முயற்சிக்குமாயின் அவற்றை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஸ தரப்பு இணைந்த எதிர்க் கட்சியினர் தவிர்ந்த ஏனைய கட்சிகள். ஜாதிகஹெல உறுமய உட்பட பெரும்பாலான கட்சிகள் இதனை ஆதரிக்க முடிவு செய்திருப்பது மிக வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்தர்ப்பமாகும்.

இவ்வாறான வாய்ப்பினை நழுவவிட்டால் இதேபோன்ற வாய்ப்பு எதிர்காலத்தில் கிட்டுமா? என்பது சந்தேகமே எனத் தெரிவித்த அவர் தற்போதுள்ள அரசியல் புறச் சூழலில் கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் பேசிப் பெறவும் மேலும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் வாய்ப்பு உண்டு என்கிறார்.

அரசியல் அமைப்பின் சில முக்கிய பகுதிகளின் சாராம்சங்களை அவர் மேலும் விபரித்தார். குறிப்பாக ஒற்றை ஆட்சியா? சமஷ்டியா? பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை. அதிகாரப் பகிர்வு. காணி அதிகாரம் என்பன குறித்து விளக்கினார்.

### அரச கட்டுமான வியாக்கியானம்

அரச கட்டுமானம் பற்றிய உரையாடலின் போது ஜனாதிபதி மைத்திரி அவர்கள் தெரிவித்த கருத்தினை ஆதாரமாக வைத்தே அம் மாற்றங்கள் குறித்து விளக்குகினார்.

அதாவது. தெற்கில் வாழும் மக்கள் சமஷ்டி என்றால் அச்சப்படுகிறார்கள். அதே போலவே வடக்கில் வாழ்பவர்கள் ஒற்றை ஆட்சி எனில் சந்தேகம் தெரிவிக்கிறார்கள்.

எனவே. மக்கள் அச்சப்படாத புதிய மொழிப் பிரயோகத்தை. புதிய அர்த்தத்தை வழங்குதல் அவசியம் என்றார்.

அரசியல் அமைப்புக் குறித்து மக்களிடம் ஆலோசனைகள் கேட்டபோது சிங்கள மக்களில் பெரும்பாலோர் சமஷ்டியை ஏன் எதிர்க்கிறார்கள்? என வினவப்பட்ட போது அது பிரிவினையை ஏற்படுத்திவிடும் எனத் தெரிவித்த அம் மக்கள். அதிக அதிகாரங்களை வழங்குவதை எதிர்க்கவில்லை.

அதேபோல ஒற்றை ஆட்சியை ஏன் எதிர்க்கிறீர்கள்? என தமிழ் மக்களிடம் வினவியபோது வழங்கிய அதிகாரங்களைப் பறிக்கும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். ஆங்கிலத்திலிருந்து மொழிமாற்றம் செய்து கூறப்படும் 'ஒற்றை ஆட்சி' என்ற பதத்தை விலக்குமாறு கோரிய மக்கள் பிரிக்கப் படாத. பிரிக்க முடியாத இலங்கை என்பதை ஏற்றுள்ளனர்.

எனவே. இதற்கான சரியான உரையாடல் அவசியம் என உணரப்பட்டதாக தெரிவித்தார். அதன் காரணமாகவே தற்போது அரச கட்டுமானம் குறித்து பயன்படுத்தும் ஒற்றை ஆட்சி என்பது நாட்டின் ஒட்டு மொத்த ஒருமித்த தன்மையை விளக்கவில்லை எனக் குறிப்பிடுகிறார்.

ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் Unitary state என்பது அரச கட்டுமானத்தின் உள்ளார்ந்த தன்மையை விளக்காது அது ஒற்றைத் தன்மையை அதாவது மத்திய அரசின் அதிகாரத்தை உணர்த்துவதாகவே புரிந்து கொள்ளப்படுவதால் சிங்களத்தில் அரச கட்டுமானம் எது? என்பது சிங்களத்திலும். ஆங்கிலத்திலும் 'எக்கய ராஜ்ய' எனவும். தமிழில் 'ஒருமித்த நாடு' எனக் கருதப்படும் விதத்தில் மொழிப் பதத்தினை பயன்படுத்தியுள்ளதாகவும். இச் சொற் பிரயோகத்தினைப் பெரும்பாலான கட்சிகள் ஏற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

### இறைமைஅதிகாரம்

இறைமை அதிகாரம் என்பது மக்களிடமே தொடர்ந்து இருக்கும் எனத் தெரிவித்த அவர். சிலநாடுகளில் குறிப்பாக பாகிஸ்தானில் அந்த அதிகாரம் இறைவனிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

மக்களே எஜமானர்கள் என்பதால் அந்த அதிகாரம் அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒன்று என்றார். தற்போது இறைமை அதிகாரம் என்பது பிரிக்க முடியாதது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இது பிரிவினையைத் தடுப்பதற்கான மேலதிக பாதுகாப்பு என்றார்.

### இரண்டாவது சபை அல்லது செனட் சபை

இச் சபையின் அங்கத்தவர்கள் மாகாண சபைகளிலிருந்து சபைக்கு 5 பேர் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட. பாராளுமன்றம் 10 உறுப்பினர்களை நியமிக்கும் என்றார். அரசியல் அமைப்பை மாற்றுவதாயின் இரண்டு சபைகளிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும். இதனையும் இணைந்த எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனையோர் ஆதரித்துள்ளனர்.

### மத உரிமை

தற்போது நடைமுறையிலுள்ளவாறே பௌத்த மதத்திற்கு மிக முக்கிய ஸ்தானம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை இதர மதங்கள் கௌரவத்துடனும். பாகுபாடற்ற அந்தஸ்தும் வழங்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் போர்க்குணத்தின் ஒரு பாரம்பரியம்

## தோழர் சுகு (ஸ்ரீதரன்) அவர்களுடன் ஒரு நேர்காணல் - நேர்கண்டவர்: அகிலன் கதிர்காமர்

**கேள்வி:**

**உங்கள் குடும்பம் மற்றும் உங்கள் பின்னணி பற்றிக் கூற முடியுமா? உங்கள் அரசியல் மயமாக்கலில் அது செல்வாக்குச் செலுத்தியதா?**

**பதில்:**

எனது குடும்பம் தீவுப் பகுதிகளான நயினாதீவு மற்றும் அனலைதீவு என்பனவற்றைச் சேர்ந்தது மற்றும் எனது தந்தை கல்வித் திணைக்களத்தில் ஒரு எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். நான் சிறுவனாக இருந்தபோது எனது குடும்பம் யாழ்ப்பாணம் கொட்டடியில் பூபாலசிங்கம் குடும்பத்தினருடன் தங்கியிருந்தது. அவர்தான் பிரபலமான பூபாலசிங்கம் புத்தகசாலையை ஆரம்பித்தவர் அத்துடன் அவர் நயினாதீவைச் சேர்ந்த ஒரு கம்யுனிஸ்ட் தலைவரும் ஆவார். எனது மாமா ராஜேந்திரனும் ஒரு அர்ப்பணிப்புள்ள கம்யுனிஸ்டாக இருந்தார். எனது தாயின் தகப்பனார் ஒரு புகையிரதநிலைய பொறுப்பாளராக இருந்தார். நான் பிறப்பதற்கு முன்பே அவர் காலமாகிவிட்டார். ஆனால் அவர் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள நல்லதொரு புத்தகச் சேகரிப்பை விட்டுச் சென்றிருந்தார். எங்கள் வீட்டில் நேரு மற்றும் காந்தியின் புகைப்படங்கள் இருந்தன. நேரு எழதிய டிஸ்கவரி ஒப் இந்தியா என்கிற புத்தகத்தின் ஒரு பிரதி மற்றும் அறிவு தொடர்பான புத்தகத்தின் பத்து பாகங்களும் எங்கள் வீட்டில் இருந்தன. பின்னர் பாரதியாரின் பழைய தமிழ்ப்புத்தகங்கள். மகாபாரதம் மற்றும் இராமாயணம் என்பனவும் அங்கிருந்தன. எனது தந்தை கொழும்பில் வேலை செய்தபோது அவர் வழக்கமாக ஒவ்வொரு வாரமும் செய்திப் பத்திரிகைகள் மற்றும் வார இதழ்கள் என்பன்வற்றை பொதி செய்து தபால் மூலம் அனுப்புவார். எனவே நான் வளர்ந்தது புத்தகங்களைச் சுற்றியே. இறுதியில் நான் பரவலாக வாசிக்க ஆரம்பித்தேன் மற்றும் அது என்னுள் பெரிய செல்வாக்கினைச் செலுத்தியது.

நான் 7ம் வகுப்பில் படிக்கும்போது நாங்கள் தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்தோம் மற்றும் அங்கு நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் சென்றேன். நான் உயர்தர வகுப்புக்கு வந்தபோது அரசியல் ரீதியாக நல்ல அறிவைப் பெற்றிருந்தேன். 1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்புக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் ம்ற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்த பதட்டமான நிலமை என்பன எனக்கு நினைவிருக்கிறது. 1974ல் நடைபெற்ற உலகத் தமிழாராய்சி மாநாநாட்டுக்கு நான் சென்றிருந்தேன். ஆனால் படுகொலைகளில் முடிந்த அந்த இறுதி நாளில் நான் அங்கிருக்கவில்லை.1977 கலவர 'காலங்களில் யாழ்ப்பாணத்தில் காவல்துறையினர் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பது என்க்கு நினைவிருக்கிறதுது. புதிய சந்தைக்கு மண்ணெண்ணை ஊற்றி அவர்கள் எரித்ததை நான் கண்ணாரக் கண்டேன். எனவே எழுச்சி பெற்றுவந்த தமிழ் தேசிய அலை எனக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியது.

**கேள்வி:**

**போர்க்குணமிக்க பல முன்னோடிகளைப் போலவே உங்கள் அரசியல் வாழ்க்கையும் 70 களின் பிற்பகுதிகளில் ஒரு இளைஞர் செயற்பாட்டாளராக ஆரம்பித்தது.1970 களின் பிற்பகுதியில் இருந்து 1980 களின் ஆரம்பம் வரையான முக்கியமான வருடங்களில் அரசியல் அமைப்பு மற்றும் அறிவுபூர்வமான செல்வாக்கு என்பன எப்படி இருந்தன?**

**பதில்:**

நான் உண்மையாகச் சொல்வதானால், பாரம்பரிய இடதுசாரியைப பற்றி நாங்கள் வி மர்சித்தோம். அவர்களின் தீர்வை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை மற்றும் இனவாத சக்திகளுடனான அவர்களின் கூட்டணி பற்றியும் நாங்கள் விமர்சித்தோம். மேலும் நாங்கள் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அது சமரசம் செய்து கொள்வது என்று நாங்கள் எண்ணினோம். அந்த நேரத்தில் இரண்டு பெரிய தாக்கங்கள் இருந்தன. ஒன்று ஜே.வி.பி யின் எழுச்சி மற்றது பங்களாதேசின் பிரிவு என்பனவே அவை. என்வே ஒரு நாடு பிரிவடைவதற்கு ஒரு ஆயுதப் போராட்டம் சாத்தியமானது என நாங்கள் நம்பினோம். நேர்மையாக இருப்பதற்காக பிரிவினை பற்றி நாங்கள் விவாதிக்க முயற்சித்தோம். அந்தக் காரணத்துக்காக சுய நிர்ணய உரிமைகள் போன்ற கோட்பாடுகளை பார்க்கலானோம். ஆகவே நாங்கள் கிழக்கு திமோர், மின்டானோ மற்றும் ஸ்பெயின் நாட்டில் உள்ள பாஸ்க் போன்ற இடங்களில் நடந்த போராட்டங்கள்பற்றி வாசித்தோம்.

கம்யுனிஸ்ட்டான சண்முகதாசன் போன்றவர்களுக்கும் மற்றும் தமிழ் தேசியவாதிகளுக்கும் இடையே பல விவாதங்கள் இடம்பெற்றன. 1970 மற்றும் 1980 களில் யாழ்ப்பாணம் அரசியல் ரீதியாகவும் மற்றும் அறிவுஜீவியாகவும் மிகவும் மும்முரமாகச் செயற்பட்டது. உயர்தரத்துக்குப் பின்பு நான் எனது கல்வியை தொடரவில்லை. ஆனால் பல உள்ளூர் புத்திஜீவிகள் என்னுள் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். இளைஞர்களாக நாங்கள் ஒன்றுசேர்ந்து பல பத்திரிகைகளை ஆரம்பித்தோம்.

கைலாசபதி. ஏ.ஜே.கங்காதரன். இந்திரபாலா. சிலான். நு"மான் மற்றும் சிவத்தம்பி போன்றோர் பல்கலைக்கழகத்தில் இருந்தார்கள். நிர்மலா. நித்தியானந்தன். சித்திரலேகா. மௌனகுரு. வரதராஜப்பெருமாள். சோமசுந்தரி. செல்வின். ஜெயபாலன் மற்றும் சேரன் போன்ற இளம் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களும் அங்கிருந்தார்கள். பல்கலைக்கழகத்துக்கு வெளியே அவர்கள் விசுவானந்ததேவன். அண்ணாமலை. பரா. தேவராஜா. சின்ன பாலா போன்றவர்கள் உட்பட பல இடதுசாரி கட்சிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள். கலந்துரையாடல்களுக்காக மணியம் புத்தகசாலை மற்றும் செந்திவேல் மற்றும் அவர்களின் கட்சியும் இருந்தது.

கேதீஷ் லோகநாதன் போன்றவர்கள் எங்களுக்கு உதவியாக இருந்ததுடன் தெற்கில் இருந்து ஒற்றுமைக்காக வந்த இடதுசாரி கட்சிகள் மற்றும் இனம் சார்ந்த நீதி மற்றும் சமத்துவம் (மிர்ஜே) இயக்கம் என்பனவற்றை சேர்ந்த வாசு. ஆனந்த வக்கும்புர. நியுட்டன். உபாலி. தயான். சுனிலா. புல்சரா, ஜோ. என்பவர்களுக்கு எங்களை அறிமுகம் செய்து



தோழர் பத்மநாபாவுடன் தோழர் சுகு (ஸ்ரீதரன்) அவரது மனைவி ஞானா. சென்னை 1990



தோழர் சுகு. சென்னை 1993

வைத்தார்கள். தெற்கில் நடைபெற்ற கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு நாங்களும் அழைக்கப்பட்டோம்.

சிலபேர் எங்களுக்காக ஆய்வுக் குழுக்களை நடத்தினார்கள் மற்றவர்கள் மாவோயிசம் பற்றி சிந்திக்க எங்களுக்கு சவால் விடுத்தார்கள். ட்ரிம்மர் மண்டபத்தில் அரசியல் படங்கள் காட்டப்பட்டன. அந்த நேரத்தில் அவைகளால் உள்வாங்கப்பட்ட நாங்கள் புரட்சி சாத்தியமானது என நம்பினோம்.

> எங்களில் கிட்டத்தட்ட 15 பேர்கள் வரை பத்மநாபாவின் தலைமையில் நடந்த அமைப்பாளார்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டில் சந்தித்தோம். நாங்கள் நீந்துவதற்குச் செல்வதுபோல கீரிமலைக்குச் சென்றோம் பின்னர் மீனவர்கள் அங்கிருந்து எங்களை இந்தியாவுக்கு கடத்திச் சென்றார்கள். அது இந்தியாவுக்குச் செல்வதற்கான சில மணி நேர படகுச் சவாரி. அந்த மாநாட்டில் நாங்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை (ஈபிஆர்எல்எப்) ஒரு இரகசிய அமைப்பாக உருவாக்கினோம். முன்னணி அமைப்புகளை மட்டுமே மேற்பார்வை செய்வது என்று நாங்கள் தீர்மானித்தோம். ஜி.யு.ஈ.எஸ் அமைப்புக்கு பொறுப்பாக நான் நியமிக்கப்பட்டேன்.

**கேள்வி:**

**தமிழ் போராளிகளுடன் எப்படி நீங்கள் தொடர்புபட்டீர்கள்?**

**பதில்:**

1977ல் ஈழ புரட்சிகர மாணவர்கள் அமைப்பு (ஈரோஸ்) லண்டனில் ரட்னசபாபதி மற்றும் அருளர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. மற்றும் அவர்கள் ஈழ மாணவர்கள் பொது சங்கத்தையும் (ஜியுஈஎஸ்) உருவாக்கினார்கள். பலஸ்தீனியன். ஆபிரிக்கன் மற்றும் ஏனைய விடுதலை இயக்கங்கள் போன்ற உலகெங்கிலுமுள்ள போராட்டக் குழுக்களுடன் அவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தியதுடன் தமிழர் போராட்டத்தை சர்வதேச ரீதியில் சிந்திக்க வைக்க விரும்பினார்கள்.


வன்னியில் அவர்கள் ஒரு பயிற்சி முகாமை ஆரம்பித்தார்கள். ஆனால் பஸ்தியாம்பிள்ளை சம்பவத்துடன் 1978ல் எல்.ரீ.ரீ.ஈ யினால் வன்னியில் சில காவல்துறையினர் கொல்லப்பட்டதினால் வன்னியில் இருந்த எல்லா முகாம்களும் சோதனைக்கு உள்ளாயின. கலந்துரையாடல்களுக்காக லண்டனில் இருந்து வந்தவர்கள் ஒருவாறு சமாளித்து வெளியேறமுடிந்தது. ஆனால் தலைமை லண்டனிலா அல்லது இங்கு யாழ்ப்பாணத்திலா அல்லது இந்தியாவிலா இருக்கவேண்டும் என்கிற கேள்வி எழுந்தது.

1980 ஆகஸ்ட்டில் எங்களில் கிட்டத்தட்ட 15 பேர்கள் வரை பத்மநாபாவின் தலைமையில் நடந்த அமைப்பாளார்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டில் வைத்து சந்தித்தோம். நாங்க்ள் நீந்துவதற்குச் செல்வதுபோல கீரிமலைக்குச் சென்றோம் பின்னர் மீனவர்கள் அங்கிருந்து எங்களை இந்தியாவுக்கு கடத்திச் சென்றார்கள். அது இந்தியாவுக்குச் செல்வதற்கான சில மணி நேர படகுச் சவாரி. அந்த மாநாட்டில் நாங்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை (ஈபிஆர்எல்எப்) ஒரு இரகசிய அமைப்பாக உருவாக்கினோம். முன்னணி அமைப்புகளை மட்டுமே மேற்பார்வை செய்வது என்று நாங்கள் தீர்மானித்தோம். ஜி.யு.ஈ.எஸ் அமைப்புக்கு பொறுப்பாக நான் நியமிக்கப்பட்டேன்.

இளைஞர்கள் அக்கறை காட்டியதால் ஜி.யு.ஈ.எஸ்(புரநள) அமைப்பு நிறைய வேலைகளைச் செய்தது. நாங்கள் பாடசாலைகளில் ஆய்வுக் குழுக்களை அமைக்க ஆரம்பித்தோம். நாங்கள் ஒடுக்கப்பட்ட சாதி சமூகங்களிடையே வேலை செய்து எங்கள் போராட்டத்துக்கு அவர்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும் என பத்மநாபா விரும்பினார். எங்கள் பெண்கள் பிரிவில் ஏராளமான பெண்களும் இணைந்தார்கள். எனது மனைவியும் மற்றும் தோழருமான ஞானா 1981ம் ஆண்டு இயக்கத்தில் இணைந்தார். யாழ்ப்பாண சமூகம் எங்களை விரும்பவில்லை ஏனென்றால் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதி இளைஞர்கள் எங்கள் இயக்கத்தில் சுதந்திரமாக இயங்கிய காரணத்தால்.

பிரச்சினைகள் தொடர்பாக வேலை செய்வதற்கு செயற்பாட்டாளர்களைச் சந்திப்பதற்காக நாங்கள் நீண்ட தூரம் பயணம் செய்யவேண்டி இருந்தது. கிழக்கில் மக்கள் எங்களுக்கு மிகுந்த மதிப்பளித்தார்கள். பல முஸ்லிம் தோழர்களும் எங்களுடன் இணைந்தார்கள். நாங்கள் தொழிற் சங்கங்கள். கிராமப்புற தொழிலாளர் சங்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சில இடதுசாரி கட்சிகள் என்பனவற்றுடன் வேலை செய்தோம். மற்றும் பல போராட்டங்களில் ஐக்கியப்பட்டோம். யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஆயிரத்திற்கும் அதிகமானோரைத் திரட்டி பிரமாண்டான ஒரு மே தின ஊர்வலத்தை நாம் ஏற்பாடு செய்தோம். ஜே.ஆரின் 1982 பொதுசன வாக்கெடுப்புக்கு எதிராக ஒரு பாரிய பிரச்சாரத்தை நாம் மேற்கொண்டோம்.

தமிழ் சமூகத்துக்கும் மற்றும் தமிழ் போராளிகளுக்கும் இடையே முறுகல் நிலையும் இருந்தது. 1981 ல் எல்.ரீ.ரீ.ஈ. சுந்தரத்தை கொலை செய்ததை நாங்கள் வன்மையாகக் கண்டித்தோம். பின்னர் 1982ல் புன்னாலைக் கட்டுவனில் வைத்து ஒரு பேரூந்து சாரதியான அண்ணாமலையை படுகொலை செய்த சம்பவம் இடம்பெற்றது அதையும் நாங்கள் எதிர்த்தோம். இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் பற்றி பல பெரிய சுவரொட்டிப் பிரச்சாரங்களை நாங்கள் நடத்தினோம்.

**கேள்வி:**

**983 ஜூலை கலவரம் ஆயுதப் போராட்டத்தை விரிவாக்கியது. அது ஈபிஆர்எல்எப் மற்றும் உங்கள் வேலைகளில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்தியது?.**

**பதில்:**

1983 ஜூலைக்குப் பின்னர் பெருந்தொகையான இளைஞர்கள் அனைத்து, போராளி இயக்கங்களிலும் இணைந்தார்கள். நாங்களும் இந்தியாவில் பயிற்சி முகாம்களை அமைத்தோம். ஆனால் அதன்பின் எங்களால் தீவிரமரன அரசியல் கல்வியைத் செயற்படுத்த முடியவில்லை. முகாம்களில் வகுப்புக்களை நடத்த நாம் முயற்சி செய்தோம். ஆனால் களத்தில் உள்ள மக்களுடன் இணைந்து வேலை செய்வதால் வரும் அரசியல கல்வியை விட அது வித்தியாசமானது. அது எங்களுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு என நான் நினைக்கிறேன்.

1984 ஜூன் 5ல் எங்களில் சிலர் மைலிட்டியில் உள்ள படகு ஓட்டும் தொழிலாளர் ஒருவரது வீட்டிற்கு ஒரு கூட்டத்துக்காகச் சென்றிருந்தோம். இராணுவம் அந்த வீட்டைச் சுற்றிவளைத்து எங்களைக் கைது செய்தது. நான் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டேன் .நான் உயிருடன் வரமாட்டேன் என்றே நான் நினைத்தேன்.

இறுதியாக நான் வெலிக்கடை சிறைக்குச் சென்றேன். அங்கு நிலமை மிகவும் வித்தியாசமானதாக இருந்தது. அங்கு தமிழ் கைதிகள் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். நாங்கள் அங்கு அரசியல் வகுப்புக்களை நடத்தினோம். கராத்தே வகுப்புகள் கூட அங்கு நடந்தது. 1983 ஐப் போன்றதொரு சிறைச்சாலை படுகொலை ஒன்று வந்தால் அதற்கு முகம் கொடுப்பதற்கு, ஏற்ற வகையில், எங்களை நாங்கள் தயார்படுத்தி வந்தோம். நல்ல சிறைச்சாலை வசதிகள் மற்றும் உணவு என்பன கிடைப்பதற்காக நாங்கள் பல போராட்டங்களை நடத்தினோம். வானொலி செய்திகளைக் கூட எங்களால் கேட்க முடிந்தது.

எனது வழக்கிற்காக ஒ்ர்தாடிப்துடன் எனது குடும்பத்தவர்களுக்கு நிலமையை அறிவித்து வந்த வழக்கறிஞர்கள் பிரான்சிஸ் சேவியர். குமார் பொன்னம்பலம் மற்றும் ஜோ ஜெயரட்னம் ஆகியோராவர். 1986 டிசம்பர் 19ல் நான் விடுவிக்கப்பட்டேன்.

நான் விடுதலையான நேரத்தில் எல்லாமே மாறிவிட்டிருந்தன. ஏப்ரல் 1986ல் எல்.ரீ.ரீ.ஈ ரெலோவை படுகொலை செய்ததை தொடர்ந்து புளொட். என்எல்எப்ரி மற்றும் பிஎல்எப்ரி என்பனவற்றையும் தடை செய்திருந்தது. நான் விடுதலையாவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு அவர்கள் ஈபிஆர்எல்எப் .இனைத் தாக்கியதுடன் அதனையும் தடை செய்திருந்தார்கள். 1986க்குள் தமிழ் ஈழம் என்பது சாத்தியமற்ற ஒன்று என்பதை நாங்கள் ஒப்புக். கொண்டிருந்தோம். திம்பு பேச்சு வார்த்தைகள் மற்றும் இந்தியாவின் நிலைப்பாடு என்பனவற்றால் பிரிவினை என்பது சாத்தியமாகாது என்பதை நாங்கள் உணர்ந்திருந்தோம்.

**கேள்வி:**

**1987 இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி, ஈபிஆர்எல்எப் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கட்டுப்பாட்டை பெற்றது அதிகாரத்தில் இருந்தபோதும் அதற்குப் பின்னரும் ஈபிஆர்எல்எப் இனது பங்கு என்னவாக இருந்தது மற்றும் உங்கள் அரசியல் சிந்தனையில் அது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது?**

**பதில்:**

வரதராஜப்பெருமாள். சிவராஜா. சிவதாசன். பத்மநாதன். நச்சினார்க்கினியன் மற்றும் விக்னேஸ்வரன் போன்றவர்கள் உட்பட எங்களிடம் இருந்த அர்ப்பணிப்புள்ள மாகாணசபை உறுப்பினர்கள் மாகாணசபை முறையை வேலை செய்வதற்கு. தக்கவாறு மாற்ற முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த சிறிதளவு ஆதரவு காரணமாக அதைச் செய்வது கடினமாக இருந்தது.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் விடுதலையான சுபத்திரன் மற்றும் நான் திரும்பவும் மக்களுடன் சேர்ந்து வேலை செய்யவே விரும்பினோம். இது மிகவும் கடினமான காலமாக இருந்தது. எங்களது அங்கத்தவர்களில் சிலர் எல்.ரீ.ரீ.ஈ தங்களை எப்படித் தாக்கியது என்பதையிட்டு மிகவும் கசப்படைந்திருந்தார்கள். மற்றும் அதேபோல எங்கள் பக்கத்தில் இருந்தும் பல 'தவறான செயல்கள்' இடம் பெற்றிருந்தன.

அந்த நேரத்தில் நாங்கள் ஏராளமான சுய விமர்சனங்களை மேற்கொண்டிருந்தோம். ஆயுதப் போராட்டத்தின் ஆபத்துகள் பற்றி இப்போது எனக்குத் தெரிகிறது. அது ஒரு இயக்கத்தை எப்படி மிருகத்தனமாக மாற்றுகிறது என்பதும் புரிகிறது. இப்போது நான் நினைக்கிறேன் வன்முறையற்ற வெகுஜனப் போராட்டத்தை மட்டுமே நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று.

இந்திய இராணுவம் பின்வாங்கியபோது. நாங்களும் இந்தியாவுக்குச் செல்லவேண்டி இருந்தது. பின்வாங்கிச் சென்ற ஈபிஆர்எல்எப் அங்கத்தவர்கள் மற்றும் குடும்பங்களை ஏற்றுக்கொள்ள தமிழ்நாடு விரும்பவில்லை மற்றும் அதனால் எங்களை ஏற்றிச்சென்ற கப்பல் ஒரிசாவில் இறங்கியது. எங்கள் அங்கத்தவர்களுக்கு அது மிகவும் கடினமான ஒரு நேரமாக இருந்தது. பின்னர் 1990ல் பத்மநாபாவும் மற்றும் வேறு 12 பேரும் சென்னையில் வைத்து எல்.ரீ.ரீ.ஈ இனால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

**கேள்வி:**

**ஈபிஆர்எல்எப் முடக்கப்பட்டபோது உங்கள் பங்கை நீங்கள் எப்படிப் பார்த்தீர்கள்?**

**பதில்:**

17 வருடங்களுக்குப் பிறகு இறுதியாக ஐதேக அரசாங்கம் வீழ்ச்சியடைந்து சந்திரிகாவின் அரசாங்கம் பதவிக்கு வந்தது. அது எங்களுக்கு ஒரு வழியை திறந்திருப்பதாக நாங்கள் உணர்ந்தோம். சுபத்திரனும் நானும் யாழ்ப்பாணத்தில் சில ஜனநாயக இடைவெளியைத் திறப்பதற்காக திரும்பவும் வேலையில் இறங்க முயற்சிப்பது எனத் தீர்மானித்தோம். 1997ல் திருமதி. யோகேஸ்வரன் பயணம் செய்த அதே விமானத்தில் யாழ்ப்பாணம் திரும்பினோம். ஒரு மேயர் என்கிற வகையில் அவரும் கூட எல்.ரீ.ரீ.ஈ யினால் கொல்லப்படும் வரை ஒவ்வொருவருடனும் சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபத்திரன் கடுமையாக வேலை செய்து யாழ்ப்பாணத்தில் பல தொடர்புகளை ஏற்படுத்தினார். ரவிராஜ் அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்தார். மற்றும் மேயர் கந்தையாவுடன் சேர்ந்து ஆனந்தசங்கரி எல்.ரீ.ரீ.ஈ இன் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாமல் யாழப்பாண பொது நூலகத்தை திறப்பதற்கு முயற்சித்தார்கள். 2000ன் ஆரம்பத்தில் ஏற்பட்ட சமாதான நடவடிக்கைகளினால் தெற்கிலிருந்து மக்கள் திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு ஆரம்பித்தார்கள். ஆனால் கொலைகள் திரும்பவும் ஆரம்பமாகின. மற்றும் 2003ல் சுபத்திரன் கொலை செய்யப்பட்டார்.

நான் நினைக்கிறேன் ஒரு இயக்கமாக நாங்கள் பல தியாகங்களைச் செய்திருப்பதுடன் மக்களில் பலரிடத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தியும் உள்ளோம். வடக்கிலுள்ள சில பிரச்சினைகளில் குறிப்பாக ஒடுக்கப்பட்ட சாதிக் கிராமங்களில் சில குறிப்பிட்ட சிந்தனைகளை நாங்கள் விட்டுச் சென்றிருக்கிறோம். ஆன்ால் இயக்கங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நேரமும் தருணமும் இருக்கிறது. அதுவும் கடந்து செல்கிறது.

**கேள்வி:**

**மே 2009ல் இடம்பெற்ற புலிகளின் அழிவு, தமிழர்களுக்கும் மற்றும் அவர்களின் அரசியலுக்கும் அழிவுகரமானதும் மற்றும் துயரமானதுமான காலத்துக்கு ஒரு முடிவுகட்டியது. போர் முடிந்து மற்றும் ஜனநாயகத்துக்கான பாதை திறந்து 8 வருடங்கள் ஆனதின் பின்னரும் ஏன் முற்போக்கான அரசியல் குறைவாக உள்ளதுடன்' தமிழ் தேசியவாத அரசியல் ஆதிக்கம் செலுத்துகிறது?**

**பதில்:**

ஆம் அதைப்பற்றி நான் ஏராளமாகச் சிந்திக்கிறேன். எல்லா இழப்புகளுக்கும் பிறகும் பலர் தங்கள் உயிர்களை இழந்த பிறகும்கூட. எங்கள் தமிழ் சமூகம் எதுவுமே நடக்காதது போலத் தொடர்கிறது. இந்த நிலமைக்கான காரணங்களை நாங்கள் ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும் மற்றும் வித்தியாசமான அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

அதை ஆரம்பிப்பதற்கு. எங்கள் சமூகத்தில் இன்னமும் ஜனநாயகம் முற்றும் அரசாங்கத்துடனான உறவு என்பன குறைவாகவே உள்ளன. ஒரு சாதாரண நபர் கச்சேரிக்குச் சென்றால் அவர் அதன் உள்ளே செல்வதற்கு கிட்டத்தட்ட பயந்த நிலையிலேயே இருப்பார். இங்குள்ள அதிகாரிகள் நிலப்பிரபுத்துவ பிரபுக்களைப்போல நடந்து கொள்கிறார்கள்.

இப்போது அரசியல் தீர்வுக்காக சிறிதளவு நம்பிக்கையே உள்ளது. தெற்கிலுள்ள ஒரு சில இடதுசாரிகளுடன் எங்கள் பிரச்சினைகள் பற்றி நாங்கள் கலந்துரையாடக் கூடியதாக உள்ளது. அத்துடன் கிராமத்திலுள்ள மக்கள் மிகவும் கடினமான பொருளாதார் நிலையில் உள்ளார்கள்.

சில பிற்படுத்தப்பட்ட கிராமங்களில் கசிப்பு மற்றும் மணல் விற்பனை செய்ப்வர்களை அரசாங்கம் சுற்றிவளைத்து கைது செய்ய விரும்புகிறது. ஆனால் இதில் உள்ள துயரமான உண்மை என்னவென்றால் சில சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு அதை விட்டால் வருமானத்துக்கு வேறு வழி கிடையாது. பொருளாதாரம் மக்களை தோற்கடித்து விட்டது மற்றும் மத்திய அரசாங்கம் ஏன் மாகாண அரசாங்கம் கூட காவல்துறையை பயன்படுத்துவதைத் தவிர இதற்கு தீர்வு எதனையும் கண்டதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் விரோத உணர்வுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவர்களது வெளியேற்றம் மற்றும் துயரங்களுக்குப் பின்புகூட அவர்கள் இன்னமும் யாழ்ப்பாண சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. சாதீய சிந்தனைகள் வலுப்பெற்று வருகின்றன. கிராமங்களில் சாலை வசதிகள் மின்சாரம் போன்ற அரச சேவைகள் ஒடுக்கப்பட்ட சாதியினரின் பகுதிகள் தொடங்கும் இடத்திலேயே தடுக்கப்படுகின்றன.

இடது பின்னணியில் இருந்து வந்த எங்களைப் போன்றவர்கள். உடைந்து போயிருந்தாலும். அத்தகைய இடது சிந்தனையுள்ள மக்கள் நூற்றுக்கணக்கில் இங்கு இங்கிருக்கிறார்கள். நாங்கள் ஒன்று சேரவேண்டியது அவ்சியமானது.நாம் ஜனநாயகம். சமூக நீதி மற்றும் நல்லிணக்கத்துக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டும்.

**மொழிபெயர்ப்பு: எஸ்.குமார். தேனீ இணையத்தளம்.**
**நன்றி :.தேனீ இணையத்தளம்.**

# உள்ளூராட்சியில் பிரதேச சபைகளின் முக்கியத்துவம்

ஜனநாயக தாபனங்களில் ஓர் அங்கமாக உள்ளூராட்சி முறைமை காணப்படுகின்றது. ஒரு ஜனநாயக நாட்டில் சகல மக்களும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்ள வேண்டும். அதற்கு வலு சேர்க்கும் வகையில் மக்களின் தேவைகளை இனம் கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கென அமைக்கப்பட்ட அமைப்புக்களே உள்ளூராட்சி அமைப்புகளாகும். இவ்வாறான உள்ளூராட்சி அமைப்புக்கள் உருவாக்கப்படுவதற்கான அடிப்படைக் காரணிகளாக பின்வருவனவற்றை ஆதாரப்படுத்தலாம். பிரதேச ரீதியிலாக செறிந்து வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல், நாட்டின் அபிவிருத்தியை துரிதப்படுத்தல், அரசாங்க நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்தல், அரசாங்க செயற்பாடுகளில் சாதாரன மக்களையும் பங்குபற்றச் செய்தல் போன்றனவாகும்.

இலங்கையின் உள்ளூராட்சி முறையானது நீண்ட காலமாக நிலை பெறுவதைக் காணலாம். அனுராதபுர இரசதாணி காலத்தில் பண்டுகாபய மன்னன் ஆட்சிக் காலத்தில் இருந்து இலங்கையில் உள்ளூராட்சி முறைமை நிலவிவருவதாக வரலாற்று ஆதாரங்கள் மூலமாக அறிய முடிகின்றது. கிராம ரீதியில் கம்சபாக்கள் மற்றும் ரட்ட சபாக்கள், கிராமத்துடன் தொடர்புடைய சகல விடயங்கள் மீதும் கவனம் செலுத்துவதாக இருந்ததோடு உறுதியான ஆட்சி முறைக்கும் வழிவகுத்திருந்தது.

எது எவ்வாறாயினும் பிருத்தானியர் ஆட்சிக் காலத்திலே உள்ளூராட்சி ஒழுங்கமைக்கப்பட்டது. குறிப்பாக டொனமூர் ஆட்சிக் காலத்திலேயே உள்ளூராட்சி முறைக்கென தனியான அமைச்சு உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் காலத்துக்கு காலம் உள்ளூராட்சி சட்டங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளூராட்சி மன்ற முறைக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இதற்கமைய இன்றைய இலங்கையில் தற்போது காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களாக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை போன்றவற்றை அடையாளப்படுத்தலாம்.

இவ்வாறு வளர்ச்சி கண்ட இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புக்களின் இன்றைய கட்டமைப்பை நோக்கும் போது 1947ஆம் ஆண்டு 29ஆம் இலக்க மாநகர கட்டளைச் சட்டத்தின் கீழ் மாநகர சபைகளையும் 1939ஆம் ஆண்டு 61ஆம் இலக்க நகரசபை கட்டளைச் சட்டத்தின் கீழ் நகர சபைகளையும் 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டது. அந்தவகையில் 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையில் 335 உள்ளூராட்சி சபைகள் காணப்பட்டன.

இதில் 18 மாநகர சபைகளும் 42 நகர சபைகளும் 270 பிரதேச சபைகளும் காணப்பட்டன. எனினும் 2011ஆம் ஆண்டு ஜனவரியில் பண்டாரவெல, ஹம்பாந்தோட்ட ஆகிய இரு நகர சபைகளும் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டதுடன் கடுவெல பிரதேச சபை நகர சபையாக மாற்றப்பட்டது. அத்துடன் ஏறாவூர் பிரதேச சபை நகர சபையாக மாற்றப்பட்டுள்ளதுடன் அக்கரைப்பற்று, தம்புல்ல ஆகிய இரு நகர சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் லுனகல, நரமால ஆகிய இரு பிரதேச சபைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

நாட்டின் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் 9வது அட்டவணையின் 4.1, 4.2, 4.3 ஆகிய உறுப்புரைகள் மூலம் இவ் உள்ளூராட்சி அமைப்புக்கான அதிகாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன். அதாவது உள்ளூராட்சி அமைச்சுக்கும் மாகாண சபையின் அதனையொத்த அமைச்சுக்கும் உள்ளூராட்சி அமைச்சும் மாகாண சபையும் ஒன்று சேர்ந்து மாகாண சபையின் மாதிரி பொறுப்புக்கள், கொள்கைகள், பதவிக் காலம் என்பனவற்றைத் தீர்மானித்து உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

இவ் அமைப்புக்களின் சட்டபூர்வ மொழி தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளாகும். (அரசியலமைப்பின் 19, 20 மற்றும் 22ஆம் உறுப்புரைகள்) அரசியலமைப்பின் 104(ஆ) உறுப்புரையின் பிரகாரம் மேற்படி ஆணைக்குழுவினாலும் தேர்தல் ஆணையாளர் நாயகத்தினாலும் தேர்தல்கள் சட்டத்திற்கிணங்க நடத்தப்படும் என கூறப்பட்டுள்ளது. மேற்படி ஆணைக்குழு இது வரை நிறுவப்படாமையால் தற்போதுள்ள தேர்தல் ஆணையாளரால் அவ் அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட்டு தேர்தல் சட்டம் அமுலாக்கப்படுகின்றது.

இவ் உள்ளூராட்சி மன்றங்கள் எவ்வாறு நிறுவப்படுகின்றன என்று நோக்கும் போது இதற்குப் பொறுப்பான அமைச்சரால் வெளியிடப்படும் கசெட் அறிவித்தல் மூலமாகும். இதன் மூலமாக நிறுவப்படுகின்ற பிரதேசம் அதன் எல்லைகள் மற்றும் உத்தியோக பூர்வ பெயர் ஆகியவை வெளியிடப்படும். முதலில் நிறுவப்பட்டு பின்னர் தேர்தல் நடாத்தப்பட்டு பேணிவரப்படும். எல்லைகள் வரையறுக்கப்படும் வேளையில் பிரதேச சபைகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு சமமானதாக தாபிக்கப்படும். அவ்வெல்லையில் மாநகரசபை, நகரசபை பிரதேசங்கள் கைவிடப்படும்.

ஆழமான அதிகாரப் பகிர்வை இவ் அமைப்புக்கள் கொண்டிருக்க வேண்டும் என்ற போதிலும் மையப்படுத்தப்பட்ட நிர்வாக ஒழுங்குகளால் உள்ளூராட்சி அமைப்புகள் பயனற்றுப்போயுள்ளன. இதனால் உள்ளூராட்சிகளின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகள் சம்மந்தமான புதியதொரு பரிணாமத்தைத் தேடுவதில் "உள்ளூராட்சி தொடர்பான தேசியக் கொள்கை" தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. உள்ளூர் மட்ட அபிவிருத்திக்கு அவசியமான ஒன்றிணைந்த ஆட்சி முறையொன்றினைக் கொண்டு வருவதற்கான திருத்தங்களின் தேவையை அது உணர்ந்துள்ளது.

அதனால் இக் கொள்கை தனது எதிர்பார்ப்புக்களை கூறும் போது "சிவில் சமூக அங்கத்தினர் அனைவரதும் மற்றும் சமூக அமைப்புகளினதும் உற்சாக பங்குபற்றுதலுடன் சுபீட்சமான கிராமிய ஆட்சி முறைக்கு "ஜனசபா" எனும் அடிமட்ட ஆட்சி முறையொன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் திறமையானதும் பயன்தரக்கூடியதும் மக்களோடு நெருக்கமான உள்ளூர் ஆட்சி முறையினை ஏற்படுத்துவதாகும். ஆகவே இவ் உள்ளூராட்சி அமைப்புக்களின் தற்போதைய அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நடைமுறை செயற்பாட்டுடன் ஆராய வேண்டியுள்ளது. அந்த வகையில் இங்கு பிரதேச சபை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி நோக்கப்படுகின்றது.

## பிரதேச சபை

எந்தவொரு நாட்டிலும் மத்திய அரசாங்கம் எப்படிப்பட்ட திறமை வாய்ந்த பலமுள்ள சிறந்த அரசாங்கமாக இருந்தாலும் மக்களின் எல்லாத்தேவைகளையும் நிறைவேற்றுவதென்பது கடினமான தொன்றாகும். அதனால் ஒவ்வொரு மட்டத்திலும் சேவைகளை வழங்குவதற்கும், அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் உள்ளூராட்சி அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அந்த வகையில், இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புக்களில் பிரதேச சபைகளும் ஒன்று. இது 1978ல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதன் உறுப்புரிமையானது கிராமோதய தலைவர்கள் மற்றும் பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது. உதாரணமாக: கிராம சேவையாளர் போன்றோர் இடம் பெறுவர்.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சட்ட மூலம் பிரதேச சபையின் அமைப்பு, தெரிவு, நோக்கங்கள், அதிகாரங்கள், செயற்பாடுகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தின. பிரதேச சபையின் நோக்கம் யாதெனில் உள்ளூராட்சி மட்டத்தில் நிர்வாக மாற்றம், அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக முடிவுகளை எடுத்தல், நடைமுறையில் மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்கல், தொழில்நுட்ப சேவைகள் வழங்கல், சுற்றாடலும் வாழ்க்கை வசதிகளும் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளது. பின்வரும் நோக்கங்களுக்காக பிரதேச சபை குழுக்கள் உருவாக்கப்படலாம்.

மாநகர சபை, நகர சபை தவிர்ந்த ஏனைய பகுதிகளே பிரதேச சபையின் எல்லைகளாக கருதப்படுகின்றது. ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் ஒவ்வொரு பிரதேச சபைகள் காணப்படும். பிரதேச சபையின் எண்ணிக்கையானது சனத்தொகை, பரப்பளவு என்பவற்றை பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

இதற்கான உறுப்பினர்கள் விகிதாசார முறையில் பட்டியல் அடிப்படையில் மக்களால் தெரிவுசெய்யப்படுவர். இதன்படி முதலாவது பிரதேச சபைக்கான தேர்தல் 1991 மே மாதம் 1ம் திகதி நடைபெற்றது. இலங்கையில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களிலும் 257 பிரதேச சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றுள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள 8 மாவட்டங்களிலும் 63 பிரதேச சபைகள் உள்ளன. இந்த 8 மாவட்டங்களிலும் தேர்தல் 1991இலும் 1997இலும் நடைபெறவில்லை. மேற்படி தேர்தல் மூலம் 194 பிரதேச சபைகளுக்கான அங்கத்தவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சபையில் அதிக ஆசனங்களை பெறும் கட்சியிலிருந்து தவிசாளர், துணைத்தவிசாளர் தெரிவுசெய்யப்படுவார். தவிசாளர் சபையின் நிறைவேற்று அலுவலராவார். தவிசாளரின் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை எழுத்திலான கட்டளைகள் மூலம் துணை தவிசாளருக்கு வழங்கலாம். தேர்தல் முடிந்து பதவியேற்ற நாளிலிருந்து 4வருடங்கள் பதவிக்காலமாகும். இக்காலகட்டத்தினை கூட்டவோ அல்லது குறைக்கவோ அமைச்சர்களுக்கு அதிகாரமுண்டு. உதாரணமாக 1995ல் நடைபெறவிருந்த தேர்தல் 1997ல் நடைபெற்றது. தற்போதைய பிரதேச சபைகள் இதற்கு முன்பிருந்த பிரதேச சபைகளை விட பின்வரும் விடயங்களில் வேறுபட்டு முக்கியத்துவம் பெறுகின்றது.

01. நேரடியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்டிருத்தல்.
02. கூடிய அதிகாரங்களை கொண்டிருத்தல்.
03. கூடியளவு நேரடியாக மக்கள் பங்கு பற்றுதலை அதிகரித்தல்.

இவ்வாறு பிரதேச சபை தொடர்பான 1987ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டமூலத்தில் நோக்கங்கள், எல்லை, உறுப்பினர் எண்ணிக்கை, தெரிவு, பதவிக்காலம், தவிசாளர், துணை தவிசாளர் போன்றவற்றை அவதானிக்க முடிகின்றது. பிரதேச சபையின் அதிகாரங்களை நோக்கும்போது பிரதேச சபைகள் நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்கு பற்றுவதற்கு வாய்ப்புக்களை வழங்குவதனுடாக உள்ளூராட்சி மட்டத்தில் நிர்வாக மாற்றம் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான முடிவுகளை எடுக்கின்ற வகையில் தங்கள் அதிகாரங்களை வகுத்துக்கொள்கின்றன.

## பிரதேச சபைகளுக்கான அதிகாரங்கள்

பிரதேச சபைகள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றவென பொருத்தமான பதவிகளை உருவாக்கிக்கொள்கின்றன. பிரதேச சபையின் சேவையிலுள்ள ஏதெனுமொரு பதவிக்கு அல்லது உத்தியோகத்தருக்கான நியமனங்களை செய்தல் அல்லது சேவையை விட்டு அகற்றல், பிரதேச சபையிலிருந்து இளைப்பாறுபவர்களின் ஓய்திவூயத்தை வழங்கல், தனது சேவைகளை செய்ய வேறு பிரதேச சபைகளுடன் அல்லது உள்ளூராட்சி அமைப்புகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல். சேவை அல்லது பண்டங்களின் வழங்கலுக்கான ஒப்பந்தம் செய்து கொள்ளல், அமைச்சரின் அனுமதியுடன் சபையின் இடப்பரப்பிலுள்ள அசையும் அசையா சொத்துக்களை உருவாக்கல்.

காணி கட்டிடங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்தல் குத்தகைக்கு விடுதல். அதாவது கட்டிடமுள்ள அல்லது கட்டிடமற்ற அரசாங்க காணிகள், பொது தடாகம், தரிசு நிலம், திறந்த வெளி, பொதுவான குளங்கள், கால்வாய்கள் போன்ற அரசாங்கத்திற்கு சொந்தமானவற்றை நிருவகிக்கவும் அவற்றிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைச் சட்டத்தால் இடமளித்துள்ள பணிகளுக்காக பிரயோகிக்கவும் முடியும் அரசாங்க ஆதனங்கள் அரசாங்கத்திற்கே சொந்தமானவையாகும். ஒப்படைக்கும் போது நிலவிய நிபந்தனைகளை மீறமுடியாது.

மேலும் பொது சந்தைகள் கிராமச் சந்தைகளை தாபித்தலும் நடாத்துதலும் கட்டுப்படுத்தல் போன்றவற்றை செய்யலாம். மற்றும் தனியார் நிலையங்களுக்கு உரிமங்கள் வழங்கலாம், பொதுப்பணிகளுக்கான காணிகளை சுவீகரித்தல், வறியவருக்கான நிவாரணங்களை வழங்குதல், நிதியத்தின் ஒரு பகுதியைக் கிராம அபிவிருத்திக்கு ஒதுக்குதல், வேலை வாய்ப்புத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல்.

அதிகார பிரதேசத்தின் பாடசாலைகளை அங்குரார்பணம் செய்தல், மூடிவிடுதல், ஒருங்கிணைத்தல், பெயரிடுதல், தரமுயர்த்தலுக்கான விதப்புரைகளை வழங்கல், சமய கலாசார விழாக்களை ஏற்பாடு செய்தல் அறநெறிப் பாடசாலைகள் மற்றும் அறக்காவலர் சபைகளை நடாத்துதல், கலாசார நிலையங்களை நிறுவுதல் இலக்கிய நூல்களை பிரசுரித்தல் கலைஞர்களுக்கான பரிசில்களை வழங்குதல்.

மகளிர் அபிவிருத்தி மற்றும் விதவைகளுக்கான பயிற்சி கைத்தொழிலை வழங்கி ஊக்குவித்தல், ஏனைய மகளிருக்கான பயிற்சி வழங்கி ஊக்குவித்தல், பெண்கள் அபிவிருத்திக்காக செயற்படுதல், தனது நிதியத்தின் ஒருபாகத்தை சிறுவர் மகளிர் நலனோன்பு சேவைகளுக்கு ஒதுக்குதல். உதாரணமாக சுகாதார வசதிகளை செய்து கொடுத்தல், தாய் சேய் நலன்பரி பணிகள், கர்ப்பம் தரித்த பெண்கள் அபிவிருத்தி, சிறுவர்களுக்கான தடுப்பு ஊசி வழங்கல்

மேற்கூறிய அதிகாரங்களுடன் விஷேடமாக மேலும் பல அதிகாரங்களை பிரசே சபைகள் கொண்டிருக்கின்றன. அவற்றினை பின்வருமாறு வரையறுக்கலாம்.

**பிரதேச சபைகளுக்கு உரித்தான விஷேட அதிகாரங்கள்.**

1. படகுத்துறைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
2. மிருகங்களின் இன விருத்தி பற்றிய ஆராய்ச்சிகளை நடாத்துதல்.
3. விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பட்டி மாடுகளைப் பராமரித்தல்.
4. கர்ப்பம் தரித்த பெண்கள் அபிவிருத்தி
5. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்.
6. கிராமிய அபிவிருத்திச்சங்கங்களுக்கு உதவிகளை வழங்குதல் என்பனவாகும்.

---

வவுனியாவை சேர்ந்த ஆசிரியை நேருதா தனது புளொக்கில் பதிவிட்டிருந்த ஆக்கம்

நன்றி : https://nerutha.blogspot.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும் ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

### தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

அரச மற்றும் வர்க்க, சாதிய, பெண் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் பாசிச கருத்தியலை நிராகரித்தும் போராடி, அக்டோபர் மாதத்தில் உயிர் நீத்த, எம்மிடம் பெயர் விரபங்கள் உள்ள தோழர்களின் பட்டியல் இது. இதே குறிக்கோள்களுக்காக உயிர்த்தியாகம் செய்த தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அவர்களை நினைவு கூருவோம்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| வ. தர்மலிங்கம் | சுதா | 01.10.1990 | திருகோணமலை |
| ஆ. சுரேஸ்குமார் | ஜீவா | 22.10.1989 | வளலாய் |
| இ. கந்தவேள் | சாமி | 04.10.1988 | இடைக்காடு |
| தே. நாகேந்திரஜோதிராஜா | ராஜன், அமீன் | 15.10.1989 | மயிலிட்டி |
| பொ. சிறிதரன் | | 00.10.1990 | மயிலங்காடு |
| க. மார்க்கண்டு | | .. .10.1990 | மட்டுவில் |
| த. தம்பிராசா | | 23.10.1989 | நுணாவில் |
| யோகதாசன் | திலகன் | 16.10.1986 | |
| எஸ். சுதாநிதி | சுதா | 18.10.1985 | காரைதீவு |
| எஸ். பிள்ளைநாயகம் | கிருபா | 18.10.1985 | குருமண்வெளி |
| ஏ. செல்வகுமார் | குணம் | 22.10.1985 | கல்லாறு |
| ஏ. தேவநாதன் | நிர்மல் | 10.05.1985 | மண்டூர் |
| எஸ். சிவப்பிரகாசம் | ரஞ்சித் | 05.10.1987 | களுவன்கேணி |
| பி. சின்னத்தம்பி | கருவல் | 24.10.1989 | நாசிவன்தீவு |
| என். சூட்டி | கெஸ்ரின் | 17.10.1989 | பேத்தாளை |
| எஸ். ஆறுமுகம் | மதி | 17.10.1989 | நாசிவன்தீவு |
| ஆர் வீரசிங்கம் | சேகர் | 26.10.1989 | சித்தாண்டி |
| கே. சத்தியசுவநாத் | வாலா | 26.10.1989 | காத்தான்குடி |
| க. சிவகுமார் | சங்கர் | 30.10.1995 | காரைதீவு |
| ஐ. முருகானந்தம் | காளி | 30.10.1005 | காரைதீவு |

## கண்ணீர் அஞ்சலி




அந்த
சமாதிக்குப்
பாலூட்டுங்கள்
அது
அழும் !
அன்னையரே !
அந்த
சமாதிக்கு
அருகில்
ஆராரோ
பாடுங்கள் !
''ஆரடித்து நீயழுதாய்''
என்றல்ல...
''ஆர் சுட்டு
நீ மடிந்தாய்'' என்று !
''அம்மா, அப்பா''
என்றழுத பிள்ளைக்கு
பார்வதி சிவன்
வந்து
பால்கொடுத்த
கதை படித்த
பெருமை – இனி
வேண்டாம்
எமக்கு.

சாளினி ரகுநாதன்

1989 அக்டோபர் 15 ஆம் திகதி காங்கேசன்துறையில் தோழர் இராஜன் (தே. நாகேந்திரஜோதிராஜா) புலிகளின் தாக்குதலில் பலியானார். இதன்போது கொல்லப்பட்ட பிஞ்சு சாளினிக்கு "விடுதலை" பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த கண்ணீர் அஞ்சலி



தோழர் ராஜன்
மயிலிட்டி



தோழர் சாமி
இடைக்காடு



தோழர் சங்கர்
காரைதீவு



தோழர் காளி
காரைதீவு



தோழர் ரஞ்சித்
களுவன்கேணி



தோழர் கிருபா
குருமண்வெளி



தோழர் ஜீவா
வளலாய்



தோழர் குணம்
கல்லாறு



தோழர் சுதா
திருகோணமலை



த. தம்பிராசா
நுணாவில்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று அக்டோபர் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஐரோப்பாவில் அகதிகள்



வி. சிவலிங்கம்

**அன்பார்ந்த வாசகர்களே.**

ஐரோப்பாவை நோக்கி மிக அதிக அளவிலான அகதிகள் வருகிறார்கள். குறிப்பாக சிரியா, ஈராக், லிபியா, யெமன் போன்ற நாடுகளில் இடம்பெறும் யுத்தங்களால் பலர் மிகவும் கஸ்டமான பாதைகளினூடாக இந்த நாடுகளை நோக்கி வருகிறார்கள். இவர்கள் படும் அவஸ்தைகள் எமது தாயகத்து மக்களுக்குத் தெரிந்திருப்பது நல்லது என நம்புகிறேன். ஏனெனில் எம்மவரில் பலர் இன்னமும் இந்த நாடுகளுக்கு செல்லலாம். அமைதியாக வாழலாம் என்ற நம்பிக்கையில் உள்ளதாக அறிகிறேன். இவர்கள் தமது பயணங்களை அல்லது அது தொடர்பான சிந்தனைகளில் இறங்குவதற்கு முன்னர் இந்த நாடுகளில் அகதிகள் தொடர்பாக ஏற்பட்டு வரும் மாற்றங்களை ஓரளவாவது தெரிந்திருந்தால் அதற்கு ஏற்றவாறாக தமது முடிவுகளை மேற்கொள்ளலாம் எனக் கருதியே இக் கடிதத்தில் அவற்றைத் தர எண்ணுகிறேன். மேற்குலக நாடுகளுக்கு அகதியாக செல்லவேண்டும் என முடிவு செய்யும் ஒருவரின் அம் முடிவுக்கான பின்னணியை நாம் அறியாமல் இருக்கலாம். இவை எந்த விதத்திலும் அம் முடிவுகளைத் தடுப்பதாக கருதாமல் அம் முடிவு மிகவும் ஆழமாக சிந்தித்து எடுத்த முடிவாக இருப்பின் அதன்மூலம் பல இடர்களைத் தடுக்க முடியும் எனக் கருதுகிறேன்.

பிரித்தானிவிற்கு சமீப காலத்தில் அகதிகளாக வந்தவர்களின் விண்ணப்பங்கள் பல நிராகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மனநிலை பாதிக்கப்பட்ட பலர் சில சூழ்ச்சிகர சக்திகளின் வலைக் குள் வீழ்ந்துள்ளார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், தடை செய்யப்பட்ட அமைப்புகள் போன்றவற்றின் கடிதங்கள் அவர்களின் விண்ணப்பத்திற்கு உதவலாம் என தவறான ஆலோசனைகளைச் சில சக்திகள் வழங்க அதனைப் பெறு வதற்காக பெருந்தொகை பணத்தினை செலவிடுவது. அல்லது வைத்திய சான்றிதழ்களைப் பெறுவது உதவலாம் எனச் சிலர் கருதுகின்றனர். இதனால் இக் கடிதங்களைப் பெற மேலும் ஆயிரக் கணக்கில் செலவுசெய்கின்றனர். இவை உண்மையான விண்ணப்பதாரிகளுக்கு உதவலாம். ஆனால் சகலருக்கும் உதவப்போவதில்லை. அவ்வாறான பொய்யான சான்றிதழ்கள் பல அம்பலத்திற்கு வந்துள்ளன. சில சட்டத்தரணிகள், வைத்தியர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

## பெருகிவரும் அகதிகள் வழிமறிக்கும் ஐரோப்பிய நாடுகள்

ஐரோப்பிய அரசுகள் அகதிகள் தொடர்பாக மிகவும் கடுமையான போக்கைக் கையாளத் தொடங்கியுள்ளன. உள்நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்துள்ளதால் தமது தவறான பொருளாதாரக் கொள்கைகளைத் திருத்தாமல் அவற்றிற்கான காரணத்தை அகதிகள் மேல் சுமத்தி மக்கள் கவனத்தைத் திசை திருப்பிச் செல்கின்றனர். இதனால் சில வலதுசாரி தீவிரவாத சக்திகள் அகதிகளைத் தாக்கி வருகின்றனர்.

இந் நிலமைகள் தொடர்ந்து காணப்பட்ட போதிலும் தாம் வாழும் நாடுகளில் உயிருடன் வாழ்வதே சிக்கலாகியுள்ள நிலையில் அம் மக்கள் கடல்களைத் தாண்டி ஐரோப்பிய நாடுகளை நோக்கி வருகின்றனர். கடந்த 2015ம் ஆண்டு துருக்கிய கடற்கரையில் 3 வயது சிறுவன் ஒருவனின் சடலம் மிதந்து வந்தது. அகதிகளின் பயணம் எவ்வளவு கொடுமை நிறைந்தது? என்பதை உலகளவில் அச் செய்தி எடுத்துரைத்தது. இச் செய்தி வெளியாகி இரண்டு வருடங்களில் மத்தித்தரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடைய முயற்சித்தவர்களில் 8500 பேர் இறந்துள்ளார்கள் அல்லது காணாமல் போயுள்ளார்கள் என ஐ நா அகதி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2016ம் ஆண்டு செப்டெம்பர் முதல் இற்றைவரை 4337 பேர் ஐரோப்பாவை நோக்கிய பயணத்தில் கடலில் மூழ்கி மரணித்துள்ளனர்.

இவர்களில் பலர் லிபியாவிலிருந்து இத்தாலியை நோக்கியும், துருக்கியிலிருந்து கிரேக்கத்தை நோக்கியும், சமீபத்தில் மொரோக்கோவிலிருந்து ஸ்பெயின் நாட்டை நோக்கியும் மக்கள் அகதிகளாக கடல் வழியாக பயணித்துள்ளனர். 2015ம் ஆண்டு செப்டெம்பர் முதல் 2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதி வரையில் 4185 பேர் கடலில் பலியாகினர். இச் சிக்கலான பயணத்தில் சிக்குண்டவர்களில் பெருந்தொகையானோர் சிறுவர்களாகும். இவர்கள் தாமாகவே இக் கஸ்டமான பயணத்தை மேற்கொள்கின்றனர். 2017ம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் இத்தாலியை நோக்கி கடல் வழியாக வந்தவர்கள் தொகை 13,700 ஆகும். இவர்களில் 92 சதவீதமானவர்கள் சிறுவர்களாகும்.

இந்த வருடத்தில் மட்டும் ஐரோப்பாவை நோக்கி கடல் வழியாக வந்தவர்களின் தொகை 120,000 ஆகும். இவர்களி 82 சத




வீதமானவர்கள் லிபியாவிலிருந்து இத்தாலிக்கு வந்துள்ளனர். இவர்களில் இவ் வருடம் யூன் மாதத்தில் மட்டும் சுமார் 5000 பேர் ஒரே நாளில் கடல் வழியாக வந்துள்ளனர். அதே போன்று இவ் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் ஸ்பெய்ன் நாட்டிற்குள் கடல் வழியாக 600 பேர் வந்துள்ளனர்.

2015 இல் ஜேர்மனி அகதிகளுக்கென அதாவது சிரியா, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளிலிருந்து வருவோருக்கென 6 மாதங்களுக்கு தனது நாட்டு எல்லையைத் திறந்து விட்டது. ஏனைய ஐரோப்பிய நாடுகள் இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஏனைய ஐரோப்பிய நாடுகள் தமது எல்லைகளைத் திறக்கத் தயங்கின. அது மட்டுமல்ல அகதிகளைப் பாராமரிக்கவென பொது நிதியம் ஒன்றை ஏற்படுத்தவும் முன் வரவில்லை. ஜேர்மனியில் அகதிகளுக்கு எதிரான எதிர்ப்புகள் அதிகரித்தன. ஜேர்மனி அரசு தனது மக்களின் ஆதரவைப் பெறாமலேயே அந்த முடிவை மேற்கொண்டது.

இதனால் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் புதிய தடைகளை அறிவித்தன. கடல்வழிப் பயணத்திற்கான சகல பாதைகளும் அடைக்கப்பட்டன. இதனால் மேலும் வருவோரின் தொகை குறைந்தது. ஆனால், ஏற்கெனவே வந்த அகதிகளின் நிலமை மிக மோசமாகியது. குறிப்பாக கிரேக்க நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்தங்கியிருந்த நிலையில் அகதிகளின் தொகை மேலும் பிரச்சினைகளை அதிகரித்தது. சிரியாவின் அகதிகள் ஜோர்டான் நாட்டிற்குள் சென்றதால் அந் நாடு பாதுகாப்புக் காரணங்களைக் கூறி தனது எல்லைகளை மூடியது. இதனால் சிரியாவிற்குள் நடைபெற்ற தொடர்ச்சியான போர் மேலும் பல ஆயிரம் மக்களின் உயிர்களைக் காவு கொள்கிறது.

## ஆபிரிக்க நாடுகளுடன் இரகசிய உடன்பாடு

இவ்வளவு பெரும்தொகையான மக்கள் ஐரோப்பாவை நோக்கி வருவதைத் தடுக்க இந்த நாடுகள் பலத்த முயற்சி செய்து வருகின்றன. சில ஆபிரிக்க நாடுகளுடன் இரகசிய உடன்பாடுகளை மேற்கொண்டு கடல் வழியாக வந்த மக்களின் விபரங்களைத் திரட்டுவதற்கான மையங்களை ஏற்படுத்துவதாகக் கூறி அம் மக்களை அந்த நாடுகளில் தடுத்து வைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. துருக்கி வழியாக வருபவர்களைத் தடுப்பதற்காக துருக்கியில் முகாம்கள் வைத்து அகதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த அகதிகளை அங்கு வைத்திருப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் பெருமளவு பணத்தை துருக்கிக்கு வழங்கி வருகின்றன. இதனைப் பயன்படுத்தி துருக்கியை ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் இணைக்காவிடில் அகதிகளைத் திறந்து விடப்போவதாக அந் நாடு ஐரோப்பிய ஒன்றியத்தைப் பயமுறுத்தி வருகிறது.


**வாசகர்களே.**

உலகில் 152 மில்லியன் மக்கள் மனிதநேய அடிப்படைத் தேவைகள் அற்று உள்ளனர். இது ரஷ்யாவின் மக்கள் தொகையை விட அதிகமானதாகும். 115 மில்லியன் மக்கள் அடிப்படைச் சுகாதார சேவைகள் அற்றவர்களாகவும், 94 மில்லியன் மக்கள் நீர் வசதி அற்றவர்களாகவும், 34 மில்லியன் மக்கள் கல்வி வசதி அற்றும் உள்ளனர். இந் நிலையில் நாம் நாடு நாடாக ஓடி எத்தனைபேர் தத்தமது வாழ்க்கையை சரி செய்ய முடியும்? எமது தாயகத்து மக்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக போராடியது தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவா? அல்லது அரசியல் சுதந்திரத்தை உயர்ந்த பட்சம் அனுபவிக்கவா? சுதந்திரத்திற்குப் பின்னதான தமிழ் அரசியலில் அம் மக்களின் பொருளாதாரத் தேவைகள் ஒரு போதும் பிரதி பலிக்கவில்லையே. அவ்வாறானால் பொருளாதாரப் பிரச்சினைகள் எதுவும் இல்லை என்ற முடிவுக்குச் செல்ல முடியுமா? அரசியல் தலைமைகள் அம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்ற முடிவுக்கே நாம் செல்ல முடியும். இன்று போரினாலும், தவறான அரசியல் அணுகுமுறைகளினாலும் மக்கள் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உள்நாட்டிற்குள் அகதிகளாக வாழும் நிலையில் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு உலகத்தில் அகதிகள் படும் அவலங்களின் மத்தியில் எமது சிந்தனைகள் வெளிநாடுகளை நோக்கிச் செல்லவேண்டுமா? அல்லது உள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி வாழ்க்கையைச் சரிப்படுத்த வேண்டுமா?

## மூன்று தசாப்த அனுபவம் அடிமைகளாக கருதப்படும் அகதிகள்

பிரித்தானியாவில் சுமார் 3 தசாப்தங்கள் வாழ்ந்து வருபவன் என்ற முறையிலும், இங்குள்ள அகதிகள் குறித்து அதிக அக்கறை செலுத்துபவன் என்ற வகையிலும் ஐரோப்பாவில் தற்போது ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பெரும் அதிர்ச்சியாகவும், ஏமாற்றமாகவும் உள்ளது. அகதிகளைச் குற்றச் செயல் புரிவோராக, கலாச்சாரத்தில் தரம் குறைந்தவர்களாக, ஏமாற்றுபவர்களாக அடையாளப்படுத்துவது அதிகரித்துள்ளது. மிகவும் துன்பங்களைச் சுமந்து வரும் அகதிகளை ஐரோப்பிய நாடுகள் அடிமைகளை விட மோசமாகவே கருதுகின்றன. நடத்துகின்றன. இரண்டாம் தரப் பிரஜைகள் எவ்வாறு நடத்தப்படுவார்கள்? என்பதை அனுபவ ரீதியாக இந் நாடுகளில் காண முடியும். நாம் ஊடகங்களின் மூலமாக உண்மைகளைக் காண முடியாது. அம் மக்களின் வாழ்வினை நேரடியாக கண்டும், அனுபவித்தும் கொண்டிருக்கும்போது அதனை உணர முடியும்.

எமது தாயகத்து மக்கள் தவறான கற்பனைகளுக்குள் வாழக் கூடாது என எச்சரிக்கத் தோன்றுகிறது. ஒரு சிலர் சில சமயம் இந்த நாடுகளுக்குள் வெவ்வேறு வழிகளில் வரலாம். ஆனால், ஒட்டுமொத்த சமூகமும் அவ்வாறான மனநிலையில் வாழ முற்படுவது மிகவும் பாதகமான விளைவுகளைத் தரும். நமது தேசத்திற்குள் அமைதியான வாழ்வைத் தேடுவது, அதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பது நிரந்தர அமைதியைத் தரும் என்பது எனது அபிப்பிராயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசியல் அமைப்பினை மேலெழுந்த ...

( 3 ம் பக்கத் தொடர்ச்சி )

இங்கு 'பாகுபாடற்ற' என்ற வார்த்தைப் பிரயோகம் குறித்து சிங்கள தேசியவாதிகள் தெரிவிக்கையில் அதுவும் மறைமுகமாக சமஅந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக கவலைப்படுவதாகத் தெரிவித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

சமத்துவம் தொடர்பான பகுதியில் அதாவது பாகுபாடு என்பது சாதி. இனம். பால். பிறப்பு என்பவற்றின் அடிப்படையில் இடம் பெறக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இது பாகுபாட்டை மேலும் தடுக்கும் ஒரு பகுதியாக உள்ளதாகக் கூறினார்.

### வடக்கு. கிழக்கு இணைப்பு

இதுகுறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளதாகவும். அதில் தற்போது இருக்கும் நிலையைத் தொடர்ந்து வைத்திருப்பது. மாகாண இணைப்பு அவசியமெனில் பாராளுமன்றம் தனியான சட்டத்தை இயற்றலாம் எனவும். கூட்டமைப்பினர் இணைப்பு அவசியம் எனத் தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

சிலர் இணைப்புத் தேவையாயின் சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தற்போதுள்ள சூழலில் வடக்கு. கிழக்கு இரண்டாக இருக்குமாயின் செனட் சபைக்கு மேலும் இரட்டிப்பு உறுப்பினர்களைப் பெறவாய்ப்பு உண்டு என்றார்.

இச் சந்தர்ப்பத்தில் மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்பாக நாட்டின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள 7 மாகாணசபைகளின் முதலமைச்சர்களின் யோசனைகளை மேற்கோள் காட்டி பல விபரங்களைத் தெரிவித்தார்.

- மாகாணசபைகளின் அதிகாரம் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.
- ஒருமுறை மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அவை மீளமத்திய அரசால் பெறப்பட முடியாது.
- ஒற்றை ஆட்சி என்ற பதம் பயன்படுத்த முடியாது.
- தேசியக் கொள்கைகள் உருவாக்கப்படின் அவற்றை நடைமுறைப்படுத்த மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.
- அவற்றை மத்திய அரசு மீளப் பெறமுடியாது.
- அதிகார பிரிப்பு தெளிவானதாகவும். சந்தேகத்திற்கு இடமற்றதாகவும் இருத்தல் வேண்டும்.
- தேசியக் கொள்கைகள் தயாரிக்கும் போது மந்திரி சபையில் மட்டும் விவாதிக்காமல் வெளிப்படையாக விவாதித்தல் அவசியம்.
- சுற்றுநிருபங்கள் மூலம் கொள்கைமாற்றங்களை அறிவிக்க முடியாது. மாகாணசபைகளுடன் கலந்துரையாடுவதும். மாகாணசபைகளுக்கு பகுதிகள் வழங்கப்பட்டால் அவற்றை மத்திய அரசு மீளப் பெறமுடியாது.

### மாகாண ஆளுநர்

இப் பதவிதொடர்ந்து இருப்பது அவசியம். ஏனெனில் அவரே மாகாணஅரசு- மத்தியஅரசுடன் தொடர்பு கொள்வதற்கான இணைப்பாக செயற்படுவார்.

ஆனால். அவரது அதிகாரங்கள் அதாவது மாகாண பொது நிர்வாகத்தில் தலையிடுவது நிறுத்தப்பட்டு. மாகாணங்களுக்கான பொது நிர்வாக ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அதுவே இடமாற்றம் போன்ற காரியங்களை நிறைவேற்றும்.

ஆனால். இவை அரசியல் அமைப்பு சபையின் அனுமதியுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அப் பதவி பெயரளவில் மட்டுமே உள்ளதாகும்.

### காணி அதிகாரம்

தற்போது காணி அதிகாரம் மாகாணசபைகளுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இக் காணிகள் தொடர்பான விவகாரங்களைத் தேசிய காணி ஆணைக்குழுவே கையாளும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால். இவ் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. அதுவே பல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்தது.

தேசிய காணி ஆணைக்குழவிற்குச் சம அளவான பிரதிநிதிகள் மத்தியிலிருந்தும். மாகாணத்திலிருந்தும் நியமிக்கப்படுவார்கள். அவர்களே காணிகள் தொடர்பான தேசியக் கொள்கைகளை வகுப்பார்கள்.

மாகாண சபைகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களை மத்திய அரசு கோருமாயின் மாகாண அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திப் பெறவேண்டும்.

அது சாத்தியப்படாவிடில் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். அவசிய தேவைக்காக உடனடியாக காணி தேவைப்படின் வர்த்தமானி அறிவித்தலுடன் நிலத்தைப் பெறலாம். ஆனால் அவை நீதித்துறையின் மீளாய்விற்கு உட்படுத்தப்படும்.

காணிகளை வழங்குதல் அல்லது குடியேற்றங்களை அமைப்பதாயின் பின்வரும் ஒழுங்கில் முதன்மை வழங்கப்படுதல் வேண்டும்.

- முதலாவது முன்னுரிமை அம் மாவட்டத்தின் பிரிவுக் காரியாலய எல்லைக்குள் வாழும் நிலமற்ற மக்கள்.
- இரண்டாவது அம் மாவட்டத்திற்குள் வாழும் நிலமற்ற மக்கள்.
- மூன்றாவது அம் மாகாணத்தின் நிலமற்ற மக்கள்.
- நான்காவதே அப் பிரதேசத்திற்கு வெளியில் உள்ள நிலமற்ற மக்களாகும்.

இவ்வாறு புதிய அரசியல் அமைப்பு யோசனைகள் குறித்து அவரது விளக்கங்கள் இருந்தன. இப் புதிய சூழலைப் பயன்படுத்தி மேலும் வாய்ப்புகளை ஏற்படுத்த இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொண்டார்.

தொகுப்பு : வி. சிவலிங்கம்
நன்றி : http://www.nadunadapu.com

## கவனிக்கப் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )



பெற்றுள்ளது என்ற குற்றச்சாட்டுகளும் இல்லாமல் இல்லை. ஆனால், குறித்த ஊழல்கள் பற்றி பேசுபவர்கள், "அவங்கள் அடிச்சாலும் செய்தவங்கள்" என்ற பாராட்டையும் சேர்த்தே அபிப்பிராயம் சொல்கிறார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது நல்லூர் கோவிலுக்கு சென்ற முன்னைய அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸவிடம் நல்லூர் கோவிலின் அர்ச்சகர், மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கம் செய்து முடித்த அபிவிருத்திப் பணிகளை நினைவுபடுத்தி கருத்து கூறியதை இங்கு குறிப்பிடலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மானிப்பாய் வீதியில் பயணம் செய்பவர்கள் அனேகமானவர்கள் முன்னைய அரசாங்கத்தையும் தற்போதைய அரசாங்கத்தையும் ஒப்பிட்டு அரசியல் பேசுவதை கேட்கலாம். அந்தளவிற்கு புனரமைக்கப்படாத இந்த வீதியின் நிலை காணப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து 3 வருடங்களை எட்டிவிட்ட போதிலும் யாழ் மாவட்டத்தில் செய்து முடித்த ஒரு வீதியையோ, ஒரு கட்டுமானத்தையோ உதாரணமாகக் கூறக் கூட எதுவுமில்லை.

முன்னைய அரசாங்கம் யாழ் மாவட்டத்தின் பல வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றியமைத்திருக்கின்றது. மீதமாயிருந்த பெருமளவு சனத்தொகையை கொண்ட வலிகாமம் தெற்கு மேற்கு (மானிப்பாய்) வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேசங்களை யாழ் நகருடன் இணைக்கும் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதுமான பிரதேசங்களுக்குச் செல்லும் மானிப்பாய் வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் உள்ளது.

2015 ஆகஸ்ட் பதவிக்கு வந்த மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கம் இந்த வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு யாழ் மாவட்டத்தின் பிரதான வீதிகளின் புனரமைப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும். ஆனால், இன்றுவரை அது நடைபெறவில்லை. ஒரு அமைச்சர் உட்பட தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட 7 மக்கள் பிரதிநிதிகளும் இந்த விடயத்தை அரசாங்கத்திடம் வலியுறுத்தி இவ் வீதியை புனரமைக்க சாத்தியமான நடவடிக்கை எதனையும் எடுக்க இயலவில்லை. தினமும் பல ஆயிரக்கணக்கானவர்கள் பயணம் செய்யும் இவ்வீதி புனரமைக்கப்படுவது எப்போது? குரல்கொடுப்பது யார்?

## ஏமாற்றங்கள் ஆகிவிட்ட எதிர்பார்ப்பு ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )



பல்லின சமூக ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைவுடன் இலங்கையின் சமூக பொருளாதார வாழ்வு ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும்.

மக்களின் பல்வேறு தரப்பினரும் பெரும் ஏமாற்றங்களுடன் வாழ்கிறார்கள்.

துயரமான நம்பிக்கையற்ற அராஜக சர்வாதிகார சூழ்நிலை மீண்டெழக் கூடாது.

அனைத்து இன, சமூக நம்பிக்கை மற்றும் பாரிய பொருளாதார சுமைகளில் இருந்து பெருவாரியான மக்கள் விடுவிக்கப்படுவதற்கான நிலைமைகளை உருவாக்க உறுதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

காலம் கடந்து கொண்டிருக்கிறது

## தமிழ் அரசியல் கைதிகளின் ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

12 தடவைகளுக்கு மேல் வந்திருக்கிறார். அப்படியான ஒருவரோடு நேரடியாகப் பேசுவதன் மூலமாக உங்கள் மக்களின் பிரச்சனைகளை நீங்கள் தீர்க்க முடியாதா?

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பின்வருமாறு பதிலளித்தார்:

"ஜனாதிபதி ஒரு நல்ல மனிதர். அவரில் நான் பெரும் மதிப்பு வைத்திருக்கிறேன். தனிப்பட்ட நட்பின் அடிப்படையில் வடக்கு மாகாணத்திற்காக நான் கேட்ட பல விடயங்களை அவர் செய்து தந்திருக்கின்றார்... அண்மையில் அவரை நான் சந்தித்த பொழுது கூட மிகவும் நட்போடு என்னோடு அவர் உரையாடினார். அப்போது, சிறைப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பல்லாண்டு காலமாகப் படும் துன்பங்களையும், அவர்களது வழக்குகள் நியாயமற்ற முறையில் கையாளப்படுவதனையும் அவருக்கு விளக்கி, அவர்களை அவர் விடுவிக்க வேண்டும் என்று கேட்டேன்... நான் சொல்லியவற்றை ஜனாதிபதி மிகவும் பொறுமையாகவும் அக்கறையோடும் செவிமடுத்தார்... அதன் பின்னர் அவர் மிகவும் நிதானமாக என்னிடம் சொன்னார்" —(ஜனாதிபதி மைத்திரிபால முதலமைச்சர் விக்கினேஸ்வரனிடம் சொன்னார்...) —

'நீங்கள் சொல்லுவதை நான் முழுமையாகப் புரிந்துகொள்ளுகின்றேன்... இந்த விடயம் தொடர்பில் நீங்கள் என்னிடம் நேரடியாகவே பேச வந்ததை நான் மிகவும் மதிக்கின்றேன்... பல ஆண்டுகளுக்கு முன்னர், நான் கூட ஓராண்டுக்கு மேலாக சிறையில் இருந்தேன்... சிறை வாழ்வின் துன்பங்களை நானும் நன்கு அறிவேன்... ஆனால், நான் மிக வெளிப்படையாக உங்களிடம் ஒரு விடயத்தை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது... தயவுசெய்து நீங்கள் என்னைப் புரிந்துகொள்ளுங்கள்... நான் உங்களுடைய கோரிக்கைக்குச் செவிசாய்க்க முடியாத நிலையில் இருக்கின்றேன்... அரசியல் விடயங்களின் காரணமா, நான் உங்களுடை ஆட்களை விடுதலை செய்ய முடியாதவனாக உள்ளேன்... நான் அவ்வாறு விடுதலை செய்தால், உடனே தெற்கில் இருப்பவர்கள் சொல்லுவார்கள்..., (தன் முன்னாலிருந்த சபையை நோக்கி முதலமைச்சர் சொன்னார், "நீங்கள் சொல்லுவீர்களாம்...") "இவர் சிங்களவர்களை ஒவ்வொருவராகப் பிடித்து சிறைக்குள் அடைத்துக்கொண்டு, தமிழர்களை மெதுமெதுவாக விடுதலை செய்கின்றார்" என்று... அதனால், 'நான் எனது ஒவ்வொரு அடியையும் மிகவும் நிதானமாகவும் கவனமாகவும் தான் எடுத்துவைக்கவேண்டியவனாக உள்ளேன்... தயவு செய்து எனது நிலையைப் புரிந்துகொள்ளுங்கள்...'

இதனைக் கூறிய பின்பு - முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சபையில் இருந்தோரைப் பார்த்துச் சொன்னார், "ஜனாதிபதி இவ்வாறு நேரடியாகவும் வெளிப்படையாகவும் என்னிடம் கூறியதை நான் மதிக்கின்றேன்."

(நன்றியுடன் பரந்தாமன் திரு சிற்றம்பலத்தின் முகநூல் பதிவிலிருந்து)
முகநூல் ID : Paranthaman Thiru Chittampalam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் இலங்கை அகதிகளும்


இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினையின் காரணமாக அங்கிருந்து அகதிகளாக 1983 தொடக்கம் 2009 வரை தமிழகத்திற்கு வந்து தஞ்சம் அடைந்து தமிழகத்தில் உள்ள 107 முகாம்களில் 62445 பேரும் வெளியில் 32231 பேரும் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் நாகபட்டினம், நீலகிரி, திருவாதவூர், தஞ்சாவூர் மாவட்டங்கள் நீங்களாக மற்றய மாவட்டங்களில் அகதிகள் முகாம்கள் அமைந்துள்ளது. இதில் செய்யாறு, கொட்டப்பட்டு (கொட்டப்பட்டு சிறைச்சாலையுடன்) தனியாகவும் கொட்டப்பட்டு சாதாரண முகாமும் உள்ளது. விசேட முகாம்களும் உள்ளன.

இந்த விசேட முகாம்கள் என்பது குற்றச்செயல்களில் அதாவது அவுஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்தலில் ஈடுபட்டோர் மற்றும் கடவுச்சீட்டு மோசடி, வெளிநாட்டிற்கு ஆட்களைக் கடத்துவதில் ஈடுபட்டு கைதானவர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி கொட்டப்பட்டு, மண்டபம் முகாம்கள் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் போது தாயகம் திரும்பிய இந்திய வம்சாவளி மக்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட நிரந்தர கட்டிடங்களாக உள்ளன. இவை இடைத்தங்கல் முகாம்களாகும் (Transit camp) மற்றய முகாம்கள் இனப்பிரச்சினை மேலோங்கிய காலகட்டங்களில் தமிழகத்துக்கு அகதிகளாக சென்றவர்களுக்காக அமைத்துக் கொடுக்கபட்ட தற்காலிக இடங்களாகவே காட்சியளிக்கிறது.

இவர்களில் முகாம்களில் வாழ்பவர்களின் அடிப்படைத் தேவைகளை தமிழக அரசு கவனித்து வருகிறது. இவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் ரேசன் பொருட்கள் வழங்கப்படுவதுடன் தமிழக மக்களுக்கு வழங்கும் நலத்திட்டங்களான முதியோர் உதவித்தொகை, விதவைகளுக்கான உதவித்தொகை, ஊனமுற்றவர்களுக்கான உதவித்தொகை, என்பனவும் தமிழக மாணவர்கள், கல்லூரி மாணவர்களுக்காக வழங்கப்படும் சைக்கிள், மடிகணினி, சீருடை போன்றவையும் வழங்கப்படுகின்றன.



புழல் முகாமிற்கு சமீபமாக சீமெந்து குடோன் வேலையில்

# நாடு திரும்புதலும்

தமிழக அரசு இலங்கை அகதிகள் விடயத்தில் கரிசனைகொண்டுள்ளதை நாம் தமிழக அரசின் ஒவ்வொரு பட்ஜெடிலும் அவதானிக்க முடியும். தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்காக அதில் ஒரு விடயமாவது கண்டிப்பாக அமைந்திருக்கும்.

இது தவிர அரசுசாரா தொண்டு நிறுவனங்களான OFERR, JRS, LIBERA, ALDRA ஆகியவை முகாம்களில் பல திட்டங்கள், விழிப்புணர்வுகள் என்பவற்றை செய்து வருகிறது. இதில் OFERR தொண்டு நிறுவனத்தின் பங்கும், செயற்பாடும் மிகவும் காத்திரமானதாக காணப்படுகிறது.

முகாமில் உள்ளவர்கள் பெரும்பாலும் தங்களது பொருளாதார பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக பல கடினமான தொழில்களில் ஈடுபட்டு தங்களது தேவைகளை நிவர்த்தி செய்து வருகின்றனர். குறிப்பாக, பிள்ளைகளின் கல்விச் செலவு, மருத்துவம் போன்றவற்றுக்காக அவர்கள் பாடாய் படுவதை அவதானிக்க முடிகிறது.



தமிழகத்திலிருந்து ஸ்ரனிஸ்

அகதிகளாக தமிழகம் வந்தபலர், இலங்கையில் கடற்தொழில், விவசாயம் போன்ற தொழில் களைச் செய்த போதும் அவர்களுக்கு தமிழகத்தில் இவ்வேலைகளைச் செய்வதற்கான வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

சென்னை புழல், கும்மிடிப்பூண்டி போன்ற முகாம்கள் அமைந் துள்ள இடங்கள் பெரும் தொழில் பேட்டைகளைக் கொண்டுள்ள தால், அங்கு சீமெந்து குடோன்களிலும், வெங்காய குடோன் களிலும் வேலை செய்கிறார்கள். சிலர் மேசன்களாகவும் பெரும்பாலானவர்கள் கூலிகளாகவும் உள்ளனர். பல முகாம் களில் உள்ளவர்கள் வீடுகளுக்கு வர்ணம் பூசும் வேலைகளைச் செய்கிறார்கள். படித்தவர்கள் கூட தங்களுக்கு உரிய வேலை



தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் இலங்கை அகதிகள், 2016

இல்லாத காரணத்தால் சீவியத்திற்காக கிடைக்கும் வேலையைச் செய்து வருகிறார்கள்.

அகதிகள் முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள அகதிகள் தமிழ் நாட்டின் பிரதான நகரங்களான சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் செறிவாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் இந்திய விசாவில் தமிழகம் வந்து பின்னர் பொலிசில் பதிவு பெற்று உள்ளவர்கள். சிலர் முகாம் களில் இருந்து வெளியேறி அவர்களது வசதிவாய்ப்புகளுக்கு ஏற்றவாறு வீடு எடுத்து தங்கியுள்ளார்கள். இவர்களைப் போன்று முகாமில் பதிவு பெற்றிருந்த சிலரும் முகாம் பதிவினை நீக்கி விட்டு வெளி இடங்களில் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து தங்கி உள்ளார்கள்.

வெளி இடங்களில் உள்ள அகதிகளைப் பொறுத்த மட் டில் அவர்களுக்கு தமிழக அரசின் சலுகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. இரு ந்தும் அவர்களுக்கு தமிழக அரசின் மருத்துவக் காப்பீடு அண்மையில் வழங்கப்பட் டுள்ளது.

தமிழகத்தில் உள்ள இலங் கையரைப் பொறுத்தமட்டில் அவர்கள் முகாம்களிலோ, வெளியிலோ பதிவுபெற்று இருக்க வேண்டும் என்பது நியதி. அல்லது விசா முடி வடையாமல் இருக்க வேண் டும். அப்படி இல்லாத நபர் கள் சட்டத்துக்குப் புறம்பாக தங்கியிருக்கிறார்கள் என் பதாகக் கணிக்கப்பட்டு கைது செய்யப்படும் வாயப்புகளும் உள்ளது.

தமிழகத்தில் தற்போது முகாம்பதிவோ அல்லது வெளிப்பதிவோ 2012ம் ஆண்டுக்குப் பின்னர் வழங்கப்படுவதில்லை. யுத்தம் முடிவடைந்து விட்ட காரணத்தால் இது அமுலுக்கு வந்துள்ளது.

நீண்ட பலவருடங்களாக முகாம்களில் குடும்பத்துடன் இருந்த ஒரு நபர் தனது தாய், தந்தை, உறவுகளை பார்ப்பதற்காக முகாமிலிருந்து இலங்கை சென்றால் அவரது பதிவு நீக்கப்படும். இலங்கை சென்ற நபர் மீண்டும் முகாமிற்கு வரும் பட்சத்தில் அவருக்கு பழைய பதிவு தற்போது வழங்கப்படுவதில்லை. அவர் முகாமிற்கு பக்கத்தில் உள்ள பொலிசில் தகவலை தெரிவித்து விட்டு முகாமில் தங்கமுடியும். இதனால் பலர் இந்திய விசா முடியுமுன் மீண்டும் இலங்கை சென்று விசாவை புதுப்பித்து வருகிறார்கள். இதேபோல்தான் வெளியில் பொலிஸ் பதிவு பெற்று இருக்கும் நபர்களின் நிலைமையும் உள்ளது.

தமிழகதில் அகதிகளாயுள்ள தாய், தந்தையர் தமது பிள்ளை களின் கல்வி தொடர்பாக மிகவும் அக்கறையுடன் இருந்து தங்களது பிள்ளைகளின் கல்விக்காக பாடுபடுகிறார்கள். பலர் பட்டதாரிகளாக உள்ளார்கள். இதுவரை 3500பேர் கல்லூரிப் படிப்பை நிறைவு செய்துள்ளனர். 1500 பேர் தற்போது கல்லூரி களில் படித்துக்கொண்டிருக்கின்றனர். இது இவர்களுக்கு இலங் கையில் கிடைத்திருக்கமாட்டாத ஒரு வாய்ப்பாகவே பலராலும் குறிப்பிடப்படுகிறது. பல முகாம்களில் தங்களது பிள்ளைகளை ஆங்கில மொழி மூலம் கல்விகற்க வைத்துள்ளனர்.

நம்நாட்டில் கிடைக்காத தொழில் நுட்பங்கள் இந்தியாவில் கிடைப்பதாலும் தொழில்துறை தொடர்பாக இலங்கையில் கிடைக்கப்பெறாத அரிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும், இது நாடு திரும்பிய பின் தங்களது வாழ்வாதாரத்தை பெருக்க பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்ற எண்ணம் கொண்ட தாலும், சிலர் அதனை சரியாக திட்டமிட்டு செய்துவருகிறார்கள். பலரிடம் இந்த அக்கறையின்மை காணப்படுகிறது.

## தமிழகத்தில் பிறந்த குழந்தைகளில் பிறப்புச்சான்று மற்றும் குடியுரிமைச் சான்று

தமிழக முகாம்களில் 1990 களிலிருந்து இன்று வரை 24000 குழந்தைகள் பிறந்துள்ளார்கள். தமிழகத்தின் முகாம்களில் தங்கியிருப்பவர்களோ அல்லது வெளியில் தங்கியிருப்பவர்களோ தங்களுக்கு குழந்தைகள் பிறந்தால், அந்தக் குழந்தைகளுக்கு இலங்கை பிப்புச்சான்று மற்றும் இலங்கை குடியுரிமைச்சான்று எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதனை சென்னை யில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகத்திற்கு பெற்றோர் சென்று அவர்கள் கேட்கும் ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும்.இந்த விடயத்தில் பெற்றோர் கவனக்குறைவாக இருந்தால் அது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

## நாடு திரும்புதல்

தற்போது முகாம்களில் நாடுதிருப்பும் வேகமும் அது தொடர்பான பேச்சுக்களும் சற்றே அதிகரித்து உள்ளது..இந்தப்பேச்சு வெளியில் தங்கியுள்ள இலங்கையரிடமும் சூடுபிடித்து விட்டது.

முகாம்களில் உள்ளவர்கள் சொந்தச் செலவிலும், ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகரகத்தின் அனுசரனையுடனும் நாடு திரும்புகின்றனர். வெளியில் உள்ளவர்கள் சொந்தச் செலவில் தான் செல்லமுடியும். இருந்தும் வெளியில் உள்ளவர்களின் நிலை மையைப் பொறுத்து அவர்களுக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகரகம் நாடு திரும்ப உதவிகள் செய்துள்ளது. இதில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட வழிமுறையின் மூலம் நாடு திரும்புவதை முகாமில் உள்ளோர் பெரிதும் விரும்புகிறார்கள். இந்த வழிமுறை மூலம் செல்வதால் அவர்கள் பல தரப்பாலும் கூர்ந்து கவனிக்கப்பட்டு அவர்களுக்கு உதவிகள் கிடைக்கும் என நம்புகிறார்கள்.

அடுத்த பத்தியில் நாடு திரும்பியவர்கள்,திரும்ப நினைப்வர்கள் எதிர்பார்ப்புகள் பற்றி தொடர்கிறேன்□□□□..

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

தி. சிறிதரன் 294, கஸ்டி வீதி, யாழ்ப்பாணம், அவர்களால் இல 79, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் மண் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation